www.tamilarangam.net

Raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE ; FRANCE



எதுவுமேயில்லாமல், வாழப் போராடி, நசுக்கப் பட்டுக் கொண்டிருக்கும் எங்களுக்காக, எங்களைப்பற்றி உங்கள் பேனக்கள் எழுதட்டும்.

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மலையகத்தில்

## -இன்று-

மலையகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணியினரை தென்னாசிய நிறுவனத்தைச் சேர்ந்த வால்றர் கெலர் சந்தித்துப் பெற்றுக்கொண்ட பேட்டியின் சுருக்கம்.

**கெல:** மலையகத்தின் பழமையான கட்சியான தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு எதிராக புதிய கட்சியை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது?

**மலை:** மலையக மக்களுக்கு இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக இழைத்துவரும் அநீதிகளை கவனமாகவே அவதானித்து வருகிறோம். 1977இல் தொண்டமான் அமைச்சரானபின் மலையகத்தில் ஒரு புதிய மாற்றம் ஏற்படும் என நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் 77' இலிருந்து 89'வரையான பன்னிரண்டு வருட காலத்தில் மலையகத்தில் எந்த மாற்றத்தையும் தொண்டமான் ஏற்படுத்தவில்லை. மாற்றங்களை அவர் ஏற்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்கள் எடுக்கும் முன்னேற்றமான நடவடிக்கைகளை அவர் தடுக்காவிட்டாலாவது நாம் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் அவரோ மற்றவர்களின் முன்னேற்றமான நடவடிக்கைகளைத்தடுத்து வருகிறார்

தொண்டமான் அரசாங்கத்துடன் சேர்ந்திருப்பது மலையக மக்களுக்கு உதவுவதற்காக அல்ல. மலையக மக்களின் போராட்டத்தை மழுங்கடித்து அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கவே என்பதைத் தெளிவாகவே புரிந்து கொண்டோம். இதே நிலைமையை நீடிக்கவிட்டால் மேலும் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டு செயற்படுவது கஷ்டம் என்றபடியால்தான் உடனடியாக புதுக் கட்சியை ஆரம்பித்து நாம் செயற்படத் தொடங்கினோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் எந்த மாற்றமும் ஏற்ப

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுத்தும் சமூகமும்

சமூகத்துடனான கருத்துப் பரிமாற்ற ஊடகங்களில் எழுத்தும் பிரதானமானதொன்றாகும். பத்திரிகைகளில் செய்திகளாகவும், சஞ்சிகைகளில், நூல்களில் கதை, கவிதை, கட்டுரை, பிற ஆக்கங்களாகவும் பல வடிவங்களில் சமூகத்தைச் சென்றடைவதுடன் அவற்றின் தன்மைகளுக்கேற்ப பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன. இன்னும் விளக்கமாகக் குறிப்பிடுவதாயின் மனித நேயமேயில்லாத இப்போதிருக்கும் சமூக அமைப்பை பேணுவதற்கும், கொடூரத் தன்மையான இச் சமூக அமைப்பை முற்று முழுதாக மாற்றி மனிதத்தை ஏற்படுத்துவதற்குமென எழுத்துகளாலும் பங்களிப்புச் செய்யப்படுகின்றன. இவ்வளவு தாத்பரியத்தையுடைய எழுத்துகளின் நோக்கங்களை அறிந்து கொள்வதற்கு எழுத்துகளின் பின்னாலிருக்கும் ஆக்கதாரர்களின் நோக்கங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

எழுதுபவர்கள் பலர் பல நோக்கங்களுக்காக எழுதுகிறார்கள். காசுக்கா, புகழுக்காக, பொழுதுபோக்குக்காக, தொழிலாக, வயிற்றுப் பசிக்காக, கொள்கைக்காக, சமூக மாற்றத்திற்காக என்று இவர்களின் நோக்கங்கள் பலவாறு வேறுபடுகின்றன. இப்படி பல நோக்கங்கள் கொண்டவர்களின் எழுத்துகள் வாசகர்களுக்குக் கிடைக்கும்போது எவை நிராகரிக்கப்பட வேண்டியவை, எவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை எனத் தெரிந்துகொள்ள முடியாமல் குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. இந்தக் குழப்பத்தை பிற்போக்குவாத, எழுத்து வியாபாரிகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு தங்கள் எழுத்து வியாபாரத்தைச் சுமுகமாக நடத்தி முடிப்பதுடன், தங்கள் நோக்கத்திற்கேற்ப நச்சுவிதைகளையும் விதைத்து விடுகிறார்கள்.

எனவே இதற்குச் சந்தர்ப்பமளிக்காமல் இப்படியானவர்களை அடையாளம் கண்டுகொண்டு அவர்களையும், அவர்களுடைய எழுத்துகளையும் நிராகரிக்கும் தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த அடையாளம் காணுதலிற்காக சிலவகை எழுத்தளார்களின் தன்மையைப் பார்ப்போம். பெரும்பாலானோர் கவர்சியையும், பாலியலையுமே தங்களுடைய முதலீடாகக் கொண்டுள்ளார்கள். இந்தியாவில் வெளிவரும் குமுதம், ஆனந்தவிகடன், இதயம் போன்ற 'பழம்பெரும்' சஞ்சிகைகளையும், கணக்கிலடங்கா வார, மாத நாவல்களையும் படித்தால் இதைக் கண்டுகொள்ளலாம். அரை, முழு நிர்வாணப் படங்களைப் பயன்படுத்தியும், நடிகைகளின் கவர்ச்சிகளைப் பயன்படுத்தியும், முறைகேடான பாலியல் தொடர்புகளையும், கொச்சையான பாலியலையும், காமக் கிளர்ச்சியைத் தூண்டும் ஆக்கங்களை எழுதியும் சமூகத்தின் அறிவையும், உணர்ச்சிகளையும் மழுங்கடிப்பதோடு, தங்களது 'புகழையும்' பரப்பிக் கொள்கிறார்கள். இந்தியாவின் பிரபல செக்ஸ் எழுத்தாளர்களில் ஒருவரானபுஷ்பா தங்கதுரைக்கு 50,000க்கு மேற்பட்ட வாசகர்கள் இருப்பதாக சஞ்சிகையொன்று குறிப்பிட்டுள்ளதாயின் எவ்வளவு தூரத்துக்கு இவர்கள் சமூகத்தை நாசமாக்கி வைத்திருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ளலாம்.

இதற்கு அடுத்தாக இன்னொரு பகுதியினர் கொலை, கொள்ளை, மர்மம், திகில் என்று சமூகத்தையே கிறிமினலாக மாற்றிவிட முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஆங்கிலக் கழிவுகளைக் கொப்பியடித்து எழுதிப் பணம் சம்பாதித்தவர்கள் இப்போதெல்லாம் தங்கள் மூளைகளையே கிறிமினல்களாக மாற்றிச் சொந்தமாகவே கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரங்களைப் படைத்து வருகிறார்கள். இவர்களின் நோக்கமும் தங்களுக்கு அதிக வாசகர்களை ஏற்படுத்துவதும், பணம் சம்பாதிப்பதுமே. தற்போது இந்தியாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள், வார, மாத நாவல்கள், பிற வெளியீடுகள் அனைத்திலும் இடம்பெறும் ஆக்கங்களில் 99 சதவீதமானவை கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரங்களையே கொண்டுள்ளன. துப்பறியும் கதை எழுதுபவர்களில் ஒருவரான ராஜேஷ்க்குமாருக்கு இந்தியாவில் பரவலாக 'நட்சத்திர மன்றங்கள்' அமைக்கப்பட்டுள்ளன. சுஜாதாவுக்கு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் இருப்பதாக இன்னொரு வாசகரே குறிப்பிட்டுள்ளார்.

சில கட்டுரையாளர்கள் தங்களைப் புத்தி ஜீவிகளாகக்காட்டிக் கொள்வதற்காக சில நல்ல (?) கருத்துகளை அவ்வப்போதுமேம் போக்காக எழுதிவிட்டு தமது பிற்போக்குத்தனத்தையே சமூகத்திடம் திணிப்பதில் குறியாக இருக்கிறார்கள். இப்படியானவர்களில் எம். எஸ். உதயமூர்த்தியைக் குறிப்பிடலாம். இந்தியாவிலிருக்கும் சமூகக் குறைபாடுகளை எடுத்துக்காட்டி இவற்றிற்கு இறுதியான தீர்வு அமெரிக்க ஜனநாயகமே(?) என்று கூறும் இந்த ஏகாதிபத்திய ஊழியரையும் சிந்தனைவாதியாக வாசகர்கள் ஏற்றுள்ளார்கள். இவரைப் பற்றி முன்பின் ஆராய்ந்தறியாமல்தூண்டில் கலம் இரண்டில் சில நல்ல கருத்துகள் இருக்கிறதேயென்று இவருடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரையைப் பிரசுரித்தமைக்காக வருந்துகிறோம்.

எம்.எஸ்.உதயமூர்த்தியைப் போலவே மறைமுகமாகவும், நேரிடையாகவும் முதலாளித்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும், சுரண்டலையும் ஆதரித்து ஆக்கங்களையெழுதிக் கொண்டிருக்கும் பலர் தற்போதைய காட்டுமிராண்டிச் சமூக அமைப்பு மாறிவிடாமலிருக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சில கவிஞர்களும், வேறு ஆக்கதாரர்களும் பெண்களை அக்கு வேறு, ஆணி வேறாக வர்ணிப்பதையே தங்களது முழுமுதற் பணியாகக் கொண்டுள்ளார்கள். இதன் மூலம் பெண்ணடிமைத்தனத்தைப் பேணியும், பெண்களை இயன்றவரை இழிவுபடுத்தியும் தங்கள் 'ஆணாதிக்க வெறியை' நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இதைவிடப் பெண் எழுத்தாளர்கள் கூட தாங்கள் அடிமைப்படுத்தப்பட்டதை, அடிமைப்படுத்தப்படுவதை மறந்து அல்லது மறைத்து ஆணாதிக்கவாதிகளாலும், தனிச்சொத்துக்காரர்களினாலும், முதலாளித்துவ அரசுகளினாலும் இச் சமூக அமைப்பில் கட்டிக் காப்பாற்றப்பட்டுவரும் பெண்ணடிமை முறைகளையும், இழிவுகளையும் சம்பிரதாயம், சடங்கு, புனிதம், மங்கலம், வழமை என்று பல பெயர்களை வைத்து போற்றி எழுதுகிறார்கள். இப்படி இவர்கள் தங்கள் அறியாமையை பறைசாற்றிக் கொள்வதுடன் மற்றவர்களுக்கும் இதைத் திணித்து விடுகிறார்கள். இப்படியானவர்களில் சமீப காலமாக மேற்கு ஜேர்மனியில் வெளிவரும் சஞ்சிகைகளில் எழுதும் விக்னபாக்கியநாதனைக் குறிப்பிடலாம். தாலி அடிமைச்சின்னம் அல்ல என்றும், அச்சம், மடம், பயிர்ப்பு, நாணம் அவசியம் என்றும் இவர் நிறுவிக்கொண்டு வருகிறார்.

இன்னும் சிலர் நடைமுறைப் பிரச்சினைகளை மக்கள் உணர்ந்து அவற்றுக்கான தீர்வுகளைத் தேடும் முயற்சியில் இறங்கிவிடாமலிருப்பதற்காக அவர்களைக் கனவுலகத்தில் சஞ்சரிக்கவிடும் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்காக மாயாஜாலக் கதைகளையும், நிஜமாக நடக்க முடியாத கற்பனைக் கதைகளையும், சினிமாத்தனமான சாகசங்களையும் எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான கற்பனை ஆக்கங்களைப் படித்த பலர் அவற்றில் எழுதியிருப்பது போல நடக்க முயன்று விபரீத முடிவுகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் சார்ந்திருக்கும் கட்சி, இயக்கம், குழு ஆகியவற்றை நியாயப்படுத்துவதற்காகவும், அவற்றின் பிரச்சாரங்களுக்காகவும் என்று சிலர் எழுதுகிறார்கள். இவர்களுடைய இந்த முயற்சியில் உண்மைகள் மறைக்கப்பட்டு தாங்கள் சார்ந்திருப்பவையைப் பற்றிய சாதகமானவற்றை மட்டுமே எழுதி மக்களை ஒரு 'மாய நிலையில்' வைத்திருப்பதையே இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் வெளிவரும் அநேக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான பத்திரிகைகளும், பல சஞ்சிகைகளும் இதையே செய்து கொண்டிருக்கின்றன. இயக்கங்களின் வெளியீடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. தாங்கள் சார்ந்திருக்கும் அமைப்புகளை நியாயப்படுத்தும் முயற்சியில் சில உண்மைகளை மறைக்கும் அல்லது கண்டுகொள்ளாமலிருக்கும் சஞ்சிகைகளின்வரிசைகளில் மேற்கு ஜேர்மெனியில் வெளிவரும் சஞ்சிகைகளான சிந்தனை, வெகுஜனம் ஆகியவை இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் இந்திய இராணுவம் மேற்கொண்டுவரும் ஆயுத அராஜகம் பற்றி எதையுமே தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாமையைக் குறிப்பிடலாம்.

சிலர் பிரச்சினைகளை சரியாக அணுகாமல் அல்லது நழுவிக்கொள்ளும் விதத்தில் எழுதிக் கொள்வார்கள். ஆரம்பகால தூண்டில் கலங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். வேறு சிலர் பிரச்சினைகளைத், தொல்லைகளை சந்திக்க முடியாதபடி, முகம் கொடுக்க முடியாதபடி வேதனை, விரக்தி, நம்பிக்கையின்மையை உண்டாக்கி சமூகத்தை கோழையாக மாற்றிவிடுவார்கள். பலர் மதங்களை துணைக்கழைத்து அனைத்திற்கும் 'கடவுளே காரணமென்று' புனைகதைகளை உருவாக்கியும் இந்தக் கைங்கரியத்தைச் செய்துகொள்கிறார்கள்.

இப்படியாக சமூகத்திற்கு எதிராக, சமூக மாற்றத்திற்கு எதிராக தங்கள் எழுத்துகளை பயன்படுத்துபவர்களை அடையாளம் கண்டு முதலில் அவர்களை முழுமையாக விமர்சிக்க வேண்டும். உண்மையிலேயே அறியாமல் தவறிழைப்பவர்கள் சரியான விமர்சனங்கள் மூலம் தங்கள் எழுத்துகளை சரியான முறையில் பயன்படுத்த இதனால் வாய்ப்பு ஏற்படும். விமர்சனத்திற்கு முகம்கொடுக்க முடியாதவர்களையும், தவறென்று தெரிந்தும் தங்கள் வழியை மாற்றிக் கொள்ளாதவர்களையும் நிராகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.


சொற்பப் பிரிவினர் பெரும்பான்மையோரைச் சுரண்டி, அடிமையாக்கி, சுகபோகம் அனுபவிக்கும் இச் சமூக அமைப்பை மாற்றி ஒடுக்கப்படும், சுரண்டப்படும், அராஜகத்தை அனுபவிக்கும், வறுமைப்படும் பெரும்பான்மையினரின் விடுதலைக்காக எழுதப்படும் எழுத்துகளே உண்மையான எழுத்துகள். சமூகத்திடமிருந்து கற்று அதைச் சரியான முறையில் சமூகத்திடமே திருப்பிக் கொடுப்பவர்தான் உண்மையான எழுத்தாளர். இப்படியான எழுத்துகள் பிரச்சினைகளைத் தைரியமாக முகம் கொடுப்பதற்கேற்ப சமூகத்தைத் தயார்படுத்துவதுடன் ஒடுக்குமுறைக்கும், அராஜகத்திற்குமெதிராக போராடுவதற்காகச் சமூகத்தைத் தூண்டும்.

முழுமையான சமூக மாற்றத்தை விரும்பும் ஆக்கதாரர்கள் கல்வியறிவில்லாதவர்களும் படித்துப் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிமையாகத் தங்கள் கருத்துகளை எழுத வேண்டும். எல்லோரும் புரிந்து செய

www.tamilarangam.net

ற்படக் கூடிய முறையிலும், எல்லோரையும் அணுகக் கூடிய முறையிலும்
ஆக்கங்களைப் படைக்க வேண்டும். முதலில் குறிப்பிட்ட இந்தியப் 'பிரபல
ங்களுக்கு' ஆயிரக் கணக்கிலும், இலட்சக் கணக்கிலும் வாசகர்கள்
இருப்பதற்காகவும், மன்றங்கள் ஏற்படுத்தப்படுவதற்காகவும், பணம் சம்
பாதிப்பதற்காகவும், புகழுக்காகவும் எழுதாமல் மக்களின் முன்னேற்றத்தி
ற்காக எழுத வேண்டும். சமூகம் இருக்கும் சூழ்நிலையிலிருந்து அந்நியப்ப
டாத முறையில் யதார்த்தமாக அமைந்திருக்க வேண்டும். பிரச்சினைகளை
எளியமுறையில் விபரிக்க வேண்டும். தீர்வைக் கொடுக்காவிட்டாலும் கூட
சரியான அணுகுமுறைகளைக் கையாளவேண்டும்.

இந்த விதத்திலும் சமூக மாற்றத்திற்கான பங்களிப்பைச்
செய்ய எழுத்தாளர்களும், வாசகர்களும் முன்வர வேண்டும். சமூக மாற்ற
த்திற்கெதிரான பிற்போக்குவாத, எழுத்து வியாபாரிகளை விமர்சித்து
சரியான பாதைக்குத் திருப்ப முயன்று, பலனளிக்காவிடின் நிராகரித்து
அவர்களின் நோக்கங்களை அம்பலப்படுத்துவதுடன் உண்மையான, மனித
நேயத்தை விரும்பும், சமுதாய மாற்றத்திற்கு பங்களிப்புச் செய்யும் எழு
த்துகளை வரவேற்போம். இதன் ஆக்கதாரர்களுக்கும் ஊக்கமளிப்போம்.



www.tamilarangam.net

# அகதிகள்

காங்கேசன்
-கோவிந்தகுமார்

நாமோ
எமது தீவுக்குள் நடந்த
நியாய எரிப்புகளில்
காயம் பட்டவர்கள்.

எங்கள்
முகவரிகளை விசாரித்த
ஐரோப்பியப்
பேனாக்கள் எழுதியது
இவர்கள்
தேசங்களைத் தொலைத்த
குற்றவாளிகள் என்று.

இப்போது
நாங்கள் இந்த
வெள்ளைத் தேசத்தின்
கறுப்பு அகதிகள்.

இந்த
முகாம் வாழ்க்கை
எப்போது முற்றுப் பெறும்?


நாட்களும்
நேரங்களும் எங்களை
விசாரணை செய்கின்றன
எமது
எதிர்காலங்கள்
என்னவென்று?

ஊரிலிருந்து
அம்மா எழுதியிருந்தாள்
நேற்றும்
உங்களில் ஒருவனை
அவர்கள் .... ?

புரிகிறது
புரட்சி என்று
புத்தகம் வாசித்த
அண்ணன் எல்லாம்
கதிரைச் சண்டைகளுக்காய்
அங்கே
அரசியல் கதை
வாசிக்கிறார்கள்.

நாங்களோ
இங்கே வெறும்
முகாம்களுக்குள்ளே ...

இருளோ
இரும்புக் கதவுகளோ அற்ற
ஓர் இளமைச் சிறைக்குள்ளே
வருடங்களை
எண்ணியவர்களாய் ...



www.tamilarangam.net

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

டப் போவதில்லை. காரணம் மலையக மக்களின் உரிமைகளைப் பெறுவதைவிட அரசாங்கத்தின் நட்பை எப்படியும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்தான் அவர்கள் அக்கறை இருக்கிறது.

கேள: இப்போது மலையக மக்கள் சந்திக்கும் பிரச்சினை என்ன?

மலை: அடிப்படை உரிமைகளில் எதையுமே மலையக மக்கள் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை. எனினும் மலையகத்தை தற்போது அச்சுறுத்தும் பெரிய பிரச்சினை சிங்கள மக்களின் குடியேற்றமாகும். இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு தோட்டப் பகுதியிலுமுள்ள தரிசு நிலங்களில் சிங்கள மக்களை அரசாங்கம் குடியேற்றத் திட்டம் தீட்டி செயற்பட்டு வருகிறது. இதைப் பிழை என்று சொல்ல இ.தொ.கவுக்குத் தைரியம் இல்லை. அத்துடன் அரசாங்கம் இத் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரும்போது கைதூக்கி ஆதரித்துமுள்ளது. இதைவிட அரசாங்கத்தின் இந்தத் திட்டம் சரியெனமக்களிடம் கூறும் தைரியம் கூட இ.தொ.கவுக்கு இல்லை.

சிங்களவர்கள் குடியேற்றப்பட்ட பகுதிகளுக்கு தமிழர்கள் போகக்கூடாது. ஆனால் தமிழர்களின் பகுதிகளில் சிங்களவர்கள் வரலாம் குடியிருக்கலாம்.

1977இல் நுவரெலியாப் பகுதியில் 3,000 சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இப்போது சட்டவிரோதமாக காடுகளை அழித்து 8,000 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. மலையக மக்களை ஐதாக்கி அவர்களது போராட்டங்களைப் பலவீனப் படுத்தவே அரசு இக்குடியேற்றத் திட்டத்தை அமுலாக்கி வருகிறது.

வெறுமனே இருக்கும் ஒரு சின்ன நிலத்தைக்கூட மலையக மக்கள் பயன்படுத்த முடியாது. ஆனால் சிங்கள மக்களை குடியேற்ற அரசாங்கம் காடுகளை அழிக்கிறது.

எல்ஜின்லே பகுதியில் தமிழர்கள் போய் காடுகளை அழித்து விவசாயம் பண்ணினார்கள் இவர்கள் வீடுகளைக்கூடக் கட்டவில்லை. ஆனால் இராணுவம் போய் அவர்களின் உடைமைகளைப் பறித்துக் கொண்டதுடன் அங்கிருந்து அவர்களை விரட்டியும்விட்டது.

இதேபோல் மாத்தளை பகுதியிலிருந்து தமிழர்கள் முற்று முழுதாக விரட்டியடிக்கப்பட்டுவிட்டார்கள். ஊவா மாகாணத்திலிருந்தும் பலர் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

www.tamilarangam.net

கெல: இதைவிட வேறு என்ன பிரச்சினைகளை புதிதாக மலையக மக்கள் முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்?

மலை: குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகவும், மலையக மக்களின் போராட்டங்களை அடக்குவதற்காகவும் முதலில் எஸ்.ரி.எப் என்ற விசேட அதிரடிப்படையினர் இங்கு அனுப்பப்பட்டார்கள் இப்போது ஊர்க்காவல் படையினர் ஆயுதங்களுடன் அனுப்பப்பட்டுள்ளார்கள். இவர்களுக்குப் பொலிசாரும், இராணுவத்தினரும் ஆயுதப் பயிற்சியளிக்கிறார்கள்.

அலகொலயில் பிரதானமான இடத்தில் ஊர்க்காவல் படையினரின் முகாம் அமைந்துள்ளது. இதைத் தாண்டித்தான் பஸ் நிலையத்திற்கோ, மருத்துவமனைக்கோ, பாடசாலைக்கோ, கடைகளுக்கோ போக வேண்டும். இந்த வழியால் போபவர்கள், வருபவர்கள் எல்லோரும் ஊர்க்காவல் படையினரால் அடித்துத் துன்புறுத்தப்படுகிறார்கள். காரணமில்லாமல் பிடித்து வைக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு நிறைய தொந்தரவுகளைக் கொடுக்கிறார்கள். வேறு பகுதியிலிருந்து இந்தப் பகுதியிலுள்ளவர்களிடம் வரும் உறவினர்கள், விருந்தினர்கள் கூட பல விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு தாக்கப்படுகிறார்கள்.

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிடலாம். ஏப்ரல் மாதம் தாமோதரம் என்ற இரவு நேரக் காவலாளி பஸ்ஸைத் தவற விட்டதினால் தாமதமாக தனது வேலைக்குச் சென்றார். அப்போது இவரைக் கண்ட ஊர்க்காவல்படையினர் இவரைத் தாக்கித் துன்புறுத்தினார்கள். இதனால் இவர் வேலைக்குப் போகாமலே திரும்பி விட்டார். மறுநாள் இவர் தான் வேலை செய்யும் இடத்திலுள்ள சுப்பிரிண்டனிடம் முதல் நாள் சம்பவத்தைப் பற்றிப் புகார் செய்தார். இதற்குச் சில மணித்தியாலங்களிற்குப் பிறகு இவரிடம் வந்த ஊர்க்காவல் படையினர் "நீ யாரிடம் முறையிட்டாலும் எங்களுக்குப் பயமில்லை. தொண்டமானிடம் சொன்னாலும் நாங்கள் பயப்பிட மாட்டோம். எங்களுக்கு நீங்கள் அடிபணிந்தே நடக்க வேண்டும்" என்று எச்சரித்து மிரட்டிவிட்டுப் போயுள்ளார்கள்.

மற்றொரு சம்பவம் றப்பொன பகுதியில் நடந்தது. ஊர்க்காவல் படையினர் நடு இரவில் இங்குள்ள லயங்களுக்குள் பிரவேசித்து தேடுதல் போட்டார்கள். இதனை ஆட்சேபித்த தொழிலாளர்கள் அவர்களால் மோசமாகத் தாக்கப்பட்டார்கள்.

கெல: இத்தகைய சம்பவங்களுக்குப் பிறகு மலையகத் தொழிலாளர்களின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படவில்லையா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலை: நிச்சயமாக ஏற்பட்டிருக்கிறது. இப்போது தொழிலாளர்கள் ஆயுதத் தலைமையையும், ஆயுதப் போராட்டத்தையுமே விரும்புகிறார்கள். இவர்களின் உறுதிக்கு ஒரு சம்பவத்தை உதாரணமாகச் சொல்லலாம். தரிசு நிலங்களை அளந்து குடியேற்றத்தை நடத்துவதற்காக றெசிற்ரூ பகுதிக்கு காணி அளக்க சில அதிகாரிகள் வந்திருந்தார்கள். அப்போது தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களை விரட்டியடித்துள்ளார்கள். ஓடிப்போன அதிகாரிகள் இராணுவத்துடன் திரும்பி வருவதாக மிரட்டிவிட்டு ஓடியிருக்கிறார்கள். அப்படி இராணுவம் வந்தாலும் தாம் தொடர்ச்சியாக எதிர்க்கப் போவதாக அந்தத் தொழிலாளர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

கேள: பிரஜாவுரிமை சம்பந்தமாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

மலை: பிரஜாவுரிமைப் பத்திரம் தேவையில்லை, பிறப்புச் சான்றிதழ் பத்திரமே போதும் என்று தொண்டமான் சொல்லி வருகிறார். அப்படியானால் தேவைப்படாத இந்தப் பிரஜாவுரிமைப் பத்திரங்களை எறிந்துவிடுங்கள் என மக்களுக்குப் பகிரங்கமாகச் சொல்லும்படி தொண்மானுக்கு எங்கள் பிரச்சாரக் கூட்டங்களில் சவால் விட்டோம். அவர் இதுவரை அதைச் செய்யவில்லை.

ஆசிரிய நியமனத் தேர்வுக்குப் போனாலோ, வங்கியில் கடன் எடுக்கப் போனாலோ எல்லாவற்றிற்கும் பிரஜாவுரிமைப் பத்திரத்தைத்தான் கேட்கிறார்கள். பிறப்புச் சான்றிதழை அவர்கள் ஏற்கிறார்களில்லை.

கேள: தற்போது பரபரப்பாகப் பேசப்படும் வாக்குரிமையைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

மலை: இப்போது மலையக மக்கள் எல்லோரையும் வாக்காளராக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இது ஏனையவர்களுடன் 'நாடற்றவர்கள்' எனப்படும் மலையக மக்களையும் வாக்காளராக்குமே தவிர அவர்களை இந் நாட்டுப் பிரஜைகளாக்காது. இதன் மூலம் மலையக மக்கள் நாடற்ற வாக்காளர்கள் என புதுமையாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

இதைவிட இன்னொரு கொடுமையான சட்டமும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய சந்ததிகளின் முதாதையர்கள் இந்தியப் பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்திருந்திருந்தால், இப்போதுள்ள சந்ததி இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்குமாயின் ஒரு வருடச் சிறைத்தண்டனையும், 5,000 ரூபா அபராதமும் விதிக்கப்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் நிருபர்களின் செய்திகள்

இலங்கையிலிருந்து :

ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடாவுக்கும் போவதற்காக கொழும்பில் தமிழர்கள் வந்து குவிந்தவண்ணமுள்ளனர். தற்போது ஐரோப்பிய பயணத்திற்காக ஏஜென்சிகளால் வாங்கப்படும் தொகை ஒருவருக்கு ஒன்றரைஇலட்சம் ரூபாவாகும். பலர் காசைக் கட்டி ஏஜென்சிகளிடம் ஏமாந்தும் உள்ளார்கள். இப்படி ஏமாற்றப்பட்டவர்களில் சிலர் இந்தியாவில் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தங்களது பயணத்திற்காகப் பலர் வாடகை வீடுகளிலும், லொட்ஜ்களிலும் தங்கியுள்ளார்கள். தங்குமிட வாடகை, தொலைபேசிக் கட்டணம், உணவு எல்லாவற்றிற்குமாக ஒருவருக்கு ஏற்படும் செலவு ஒரு மாதத்திற்கு 5,000 ரூபாவாகும். பலர் 6 மாதங்களுக்கு மேலாக இப்படிச் செலவழித்துக் கொண்டு தங்கள் பயணத்திற்காகக் காத்திருக்கிறார்கள்.

கனடாவிலிருந்து:

கூடுதலான தமிழர்கள் இங்குதான் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் இலங்கையில் நடக்கும் சம்பவங்களைப் பற்றிக் கேட்டால் பெரும்பாலானவர்கள் தங்களுக்குத் தெரியாதென்றோ அல்லது அங்கே சும்மா சண்டை பிடிக்கிறார்கள் என்றோ கூறுகிறார்கள். கனடாவில் வாழ்வதற்கான அனுமதி பெற்றவர்கள் தங்கள் குடும்பத்தினரையும், உறவினர்களையும் இங்கு வாழ அனுமதிக்கும்படி கனடிய அரசிடம் விண்ணப்பித்துள்ளார்கள். இதன்படி கனடாவுக்கு வர விசாவுக்காகக் காத்திருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை சுமார் 20,000 ஆகும். இவர்கள் அத்தனை பேரும் கனடாவுக்குள் வந்து சேர 3 வருடங்களாகலாம்.

தமிழர்கள் கனடாவுக்கு வந்ததும் தங்கள் முன்னேற்றத்தில் மட்டுமே அக்கறையாயிருக்கிறார்கள். முன்னேற்றம் என்பது இவர்களைப் பொறுத்தவரை பணம்தான். வீடுவாங்குதல், கார் வாங்குதல், ஆடம்பர வாழ்க்கை என்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். இங்கு பெரும்பாலானோருக்கு இலங்கை பற்றிய எந்தச் செய்தியும் தெரிவதில்லை. ஏனெனில் தாங்கள் இங்குதான் இருக்கப் போகிறோம், தங்கள் உறவினர்களும் இங்கு வந்துவிடுவார்கள், எனவே இலங்கையைப் பற்றி ஏன் சிந்திப்பான் என்ற மனோபாவம்தான் இதற்குக் காரணம்.

வயது முதிர்ந்த தமிழர்களும் கனடாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது இவர்களின் எண்ணிக்கை சுமார் 2,000க்கும் அதிகமாகும். இவர்களுக்கு சுகயீனங்கள் கூடுதலாக வருவதுடன் மனநோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் அதிகமாய் உள்ளன.

சுவீடனிலிருந்து:

அண்மைக் காலமாக சுவீடனிலும் வெளிநாட்டவருக்கெதிரான நாஸிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இதைவிட சுவீடனின் தென்பகுதியை ஒட்டிய 'சேபோ' என்ற இடத்தில் இதன் நகரசபை வெளிநாட்டவர்களை வாழ அனுமதிக்க மறுத்து வருகிறது. இதை எதிர்த்து கண்டனம் தெரிவித்து வரும் சுவீடன் பிரஜைகள் நாஸிகளினால் பயமுறுத்தப்படுகின்றனர்.

சுவிற்சலாந்திலிருந்து:

'பற்றியோறிஉக்உகன் புறொன்ற்' என்ற புதிய நாஸிகளின் 20 பேரடங்கிய குழுவொன்று சென்ற மாதக் கடைசியில் 'சூக்' என்ற நகரத்திலுள்ள அகதிகளின் விடுதிக்குள் புகுந்து தாக்குதல் நடாத்தியது. இதில் படுகாயமுற்ற தமிழர் ஒருவர் மோசமான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். கட்டிடமும், அங்கிருந்த உடைமைகளும் நாஸிகளால் முற்றாக நாசமாக்கப்பட்டன. பொலிசார் வருவதற்குள் இவர்கள் தப்பியோடிவிட்டனர்.

---

உலகத்தின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் தமிழர்கள் பற்றிய செய்திகளை அனுப்பி வைப்பதற்காக நிருபர்கள் தேவைப்படுகிறார்கள். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும் துண்டில் நிருபர்களாகி முக்கிய தகவல்களை சுருக்கமான முறையில் எமக்கு அனுப்பி வையுங்கள். நீங்கள் விரும்பினால் மட்டுமே உங்கள் பெயர் பிரசுரிக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படல்.

12.05.89இல் எபர்ஸ்பாக் என்ற இடத்தில் வசித்து வந்த கணபதிப்பிள்ளை குணேந்திரராஜா என்பவர் மாதாந்த சமூக உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக கொப்பிங்கன் என்ற இடத்திலுள்ள மாவட்டசபைக்குச் சென்றபோது அங்கு வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

தகவல்: ஏ.யோன்
புளொச்சிங்கன்

அரசியற் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யாவிடின், அதைக் காரணமாக வைத்து அப்படியானவர்களைத் திருப்பியனுப்ப பயேர்ண், பாடன்வூற்றன்பேர்க், றைன்பெல்ட்ஸ் மாநில அரசுகள் தீர்மானித்து அதை நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனவே அரசியற் தஞ்சம் கோரியோர் தங்களுடைய தஞ்சத் தீர்ப்பு பாதகமாக கிடைக்கப்பெறின் உரிய காலத்திற்குள் அதற்கெதிராக மேன்முறையீடு செய்து கொள்ளுதல் அவர்களுக்குப் பாதுகாப்பானதாகும்.

நோர்த்றைன் வெஸ்ற்பாலின், பிறீமன் மாநில அரசுகள் கிறிமினல் குற்றங்களில் ஈடுபட்ட அரசியற் தஞ்சம் கோரியவர்களை அவர்களுடைய நாட்டுக்குத் திருப்பியனுப்பத் தீர்மானித்துள்ளன. எனக்குத் தெரிந்தவரையில் இதன்படி குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இரண்டு தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இதில் ஒருவர் போதை வஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டவரெனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். தயவு செய்து குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாமென அரசியற் தஞ்சம் கோரியோரைக் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்: ஒரு சட்டத்தரணி

---

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது. என்றாலும் இப்போதுள்ள மலையகத் தொழிலாளர்கள் எவரும் இந்தியா போகவிரும்பவில்லை. இலங்கைப் பிரஜையாக இங்கிருக்கவே விரும்புகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

சர்வதேசப் பெண்கள் தினம் குறித்தோ அல்லது தங்கள் நிலைபற்றியோ தங்களைச் சூழ நடப்பதைப் பற்றியோ பெண்கள் விழிப்புணர்வின்றி இருப்பது வருத்தத்திற்குரியதே. ஊண்டியின் முயற்சிக்குப் பாராட்டுக்கள். முன்னேற்றத்திற்கு வாழ்த்துகள். 'கனவை மிதித்தவன்' நன்றாக உள்ளது.

நோர்வே — ச. மைத்ரேயி

சிவத்தின் கவிதைவரிகள் எல்லோருக்கும் ஊசி போடுகிறது. 'ஈரமான பாறைகளில்' குளிர்ச்சியில்லை. கரும் வெப்பந்தான் வீசுகிறது. வளமான செய்யுளுக்கு வாழ்த்துகள்.

நூறன்பேர்க் — ப. வி. சிறிரங்கன்

'ஈரமான பாறைகள்' கவிதை நன்றாக அமைந்திருந்தது. 'ஓங்கியடிக்கும் ஆயுத அலையும் ஒருநாள் ஓய்ந்து போகும், வருவீர்கள் அடிப்படை புரிந்து அடிமட்டம் தேடி' போன்ற வரிகள் கவிஞரின் தெளிவான தொலை நோக்குப் பார்வையை துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. அறிவியல் ரீதியாக யதார்த்த உண்மைகளை கவிதைகளாக வெளிக் கொணரும் கவிஞர்கள் வரிசையில் சிவம் அவர்களும் இடம்பெற்று வருகிறார்.

'புதிய பாதை' கதையில் ஜீவானந்தனுக்காகப் பார்க்கப்பட்ட பெண்களில் அநேகமானவர்கள் நிறஞ்சனாவின் நிலையிலேயே இருந்தார்கள் என்று எழுதியிருப்பது எழுத்தாளர் சில விடயங்களில் அளவுக்கதிகமாகக் குழம்பிப்போயுள்ளதைக் காட்டுகிறது. நிலைமைகளைச் சரிவரப் புரிந்துகொண்டு அவற்றை கதையோடு இணைப்பதை தவிர்த்து கற்பனையை அளவுக்கதிகமாக ஓடவிடுவது நிருபா போன்ற வளரும் எழுத்தாளர்களுக்கு நல்லதல்ல.

'கனவை மிதித்தவன்' தொடர்கதையில் கதாபாத்திரங்களை இன்றைய ஈழ அரசியல் நிலைமைகள் பற்றிய விவாத உரையாடலில் எழுத்தாளர் புகுத்தியுள்ளது வரவேற்கத்தக்க விடயமே.

அஸ்பேர்க் — கங்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிருபா ஒரு வளர்ந்து வரும் எழுத்தாளி என்பதை 'பெண்பாவத்திலிருந்து' 'தண்டனை'வரையிலான சிறுகதைகளின் வளர்ச்சி காட்டியது. 'புதியபாதை யில் அரசியல் சகதியை அள்ளிப் பூசிக் கொண்டதால் இலக்கிய நேர்மை யைக் காணமுடியவில்லை.

ஸ்ருட்காட் கே.வசந்தன்

நா.நிருபா எழுதிய 'புதிய பாதை' சிறுகதையில் யாழ்ப்பாணத்தில் உள் ள அநேகமான பெண்கள் இந்தியப் படையினரால் கற்பழிக்கப்பட்டுள்ள தாக சித்தரிக்கப்பட்டுள்ளது.பெண்கள் எந்த ஆணாலும் கற்பழிக்கப்பட லாம்.பெண்கள் அவர்களது சகோதரர்கள், மாமன்மார்கள், முதலாளிகள் என எல்லோராலும் கற்பழிக்கப்பட்டு வருகிறார்கள்.

நாங்கள் பெண் ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும்போது இரண்டு முக் கிய விடயங்களைக் கவனிக்க வேண்டும்.பெண்கள் ஏன் கற்பழிக்கப்படுகிறார் கள்?சமூகம் அவர்களை எவ்வாறு நோக்குகிறது?

ஒரு வளரும் எழுத்தாளியாகத் திகழும் நிருபா இந்த இரண்டு கேள்விகளு க்கும் விடையளிக்கத் தவறிவிட்டார்.சுருங்கக் கூறினால் அவர் அந்தக்கேள் விகளை அப்படியே விட்டுவிட்டார்.

தனக்கு நேர்ந்த சம்பவத்தை நிறஞ்சன ஜீவானந்தனிடம் நேரடியாகக் கூறியதன் மூலம் சகல பெண்களுக்கும் முன்மாதிரியாகத் திகழுகிறார். அநே கமான பெண்கள் சமூகத்திற்குப் பயந்து தங்களுடைய கதைகளை மறை த்து விடுகின்றனர்.ஜீவானந்தன் போன்ற கோழைகளை நம்பி மோசம் போகாமல் ஆரம்பத்திலேயே நிராகரித்துவிட்டது போல் காட்டியிருப் பது வரவேற்கத்தக்கது.


வியாபார ஸ்தாபனங்களால் பெண்கள் எவ்வாறு சோப்பு விளம்பரங்களு க்குப் பாவிக்கப்படுகிறார்களோ அதேவிதத்தில் இப்போது சிலரால் தங் கள் அரசியற் பிரச்சாரத்திற்கும் பாவிக்கப்பட்டு வருகிறார்கள்.நிருபாவும் இந்தக் கூட்டத்துடன் சேர்ந்து கொள்கிறார்.அவர் தனது கதைக்கு 'புதிய பாதை' என்று பெயர் சூட்டியிருந்தாலும் எல்லோரையும் போலவே பழைய பாதையிலேயே செல்லுகிறார்.

ஸ்ருட்காட் ப.மல்லிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




20.04.89 (வீரகேசரி)

மட்டக்களப்பில் ஒரு மாதத்திற்குமுன்னர் காணமல் போன பி.பத்மானந்தன் என்பவர் பிணமாக மீட்கப்பட்டார்.

22.04.89 (வீரகேசரி)

திருகோணமலையில் பாலாஜி, செந்தில்என்ற இரு உறுப்பினர்கள் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருப்பதாக ஈரோஸ் அறிவித்துள்ளது.

இந்தியப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழகமாணவனை சுபராஜ் என்பவரைவிடுதலை செய்யுமாறு பல்கலைக் கழக மாணவ அவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் 10 தமிழ் வாலிபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திக்குவெல்ல கோட்டேகொட பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, இரண்டு பிள்ளைகள் ஆகியோர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

23.04.89 (வீரகேசரி)

இந்திய இராணுவத்தால் இன்பம்என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பண்ருகம் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அன்னபூரணம் கனகநாயகம்என்ற பெண் கொல்லப்பட்டார்.

26.04.89 (வீரகேசரி)

நமுனுகுல பகுதியைச் சேர்ந்த பள்ளேகட்டுவ, பின்காரவ தோட்டத்தொழிலாளர்கள் முகமூடி அணிந்தோரால் தாக்கப்பட்டதுடன் வீடுகளும் உடைக்கப்பட்டன. இச் சம்பவத்தினால் 200 பேர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். இத் தொழிலாளர்கள் இத்துடன் மூன்றாவது முறையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

குருமண்வெளியைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான இராமலிங்கம், சத்தியநாதன் ஆகியோர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

வெளிவாரிப் பட்டதாரிக்கான ஆசிரிய நியமனப் பரீட்சைக்கு வருவோர் பெற்றோரை வணங்குவதாக உறுதிப்படுத்தும் கடிதத்தைப் பெற்றோரிடமிருந்து வாங்கிவர வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

27.04.89 (வீரகேசரி)

யாழ் மாவட்டத்திலுள்ள ரெலோ இயக்க முகாம்கள் மூடப்பட்டதுடன் இயக்க உறுப்பினர்கள் இந்தியஇராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளுக்கும், ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பி

www.tamilarangam.net

ளர்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் தாமோதரம்பிள்ளை கனகம்மா, கந்தசாமி பாரதி, இன்னொரு வயோதிபர் ஆகிய 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர்.

29.04.89 (வீரகேசரி)

கடந்த மார்ச் மாதம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட முன்னாள் ஈரோஸ் உறுப்பினரும், கடந்த தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது சுயேட்சைக்குழுவின் வேட்பாளருமான நாகு என்ற குமாரவடிவேல் மிகவும் மோசமாக அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த குமணன் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார். இவர் இயக்கமொன்றிலிருந்து விலகியவர்.

தலாவையில் இனந்தெரியாதநபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுஅவரது சடலம் எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கொலைக்கு புதிதாகத் தோன்றிய 'ஈகிள்' என்ற இயக்கம்உரிமை கோரியுள்ளது.

01.05.89 (வீரகேசரி)

இறக்குவானை பொத்துபிடியபாதையில் ஆறு இளைஞர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டுக் கருகியநிலையில் காணப்பட்டன.

02.05.89 (வீரகேசரி)

புலிகளின் காங்கேசன்துறைப்பகுதித்தலைவர் உட்பட மூவர் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

திருநெல்வேலியில் இந்தியப்படையினருடனான மோதலில் சுரேஉக்குமார் வரதப்பா என்பவர் சயனைட் அருந்தி மரணமானார்.

24.04.89 (ஐலண்ட்)

வடக்கு, கிழக்கு இணைப்புக்கான வாக்கெடுப்புக்கு முன்பதாக கிழக்கு மாகாணத்திற்கு பாகிஸ்தான் இராணுவத்தை அழைப்பது சம்பந்தமான அரசாங்கத்துடனானபேச்சுவார்த்தைக்கு முஸ்லீம்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

01.05.89 (புதிய காற்று)

லிந்துல பகுதியைச் சேர்ந்த ஒல்டிரிம் தோட்டத்தின் ஒரு டிவிசனின் லயத்தில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையொன்று திறந்து கிடந்த மலசலக் குழிக்குள் விழுந்து மூச்சுத்திணறி இறந்துள்ளது.

02.05.89 (வீரகேசரி)

யாழ்பல்கலைக்கழக மாணவர்களான பிரபாகரன், சோதிதாஸ், இராஜேஸ்வரி, பாலாம்பிகை உட்பட 7 மாணவர்கள் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்.

03.05.89 (வீரகேசரி)

ஆயுதம் ஏந்திய குழுக்களினதும், இந்திய இராணுவத்தினதும் கெடுபிடிகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதெனயாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முடிவு செய்துள்ளனர்.

பொலன்னறுவையில் 3ஆணும் 1பெண்ணும் இனந்தெரியாதோரால்சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

04.05.89 (வீரகேசரி)

மே தினத்தில் வவுனியா இந்தியத் தடுப்பு முகாமிலிருந்து தப்பியோடும்போது பாலேந்திரன், செல்வம், கணேசலிங்கம், தியாகராஜா ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

"இலங்கைத் தமிழ் மக்கள் இன்று திரை கடலோடித் திரவியம்தேட முற்பட்டுவிட்டனர். பணத்தைத் தேடுவதோடு தமிழ்மக்கள் நின்று விடக்கூடாது. நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். இன்றைய சூழ்நிலைகளைச் சாட்டாகக்கொண்டு அந்நிய நாட்டில் எமது அறிஞர்கள், திறமைசாலிகள் போய் குடிபதிகளாகிவிடலாகாது. இவர்கள் தாயகம் திரும்பி ஜென்ம பூமியை மலர்ச்சியடையச் செய்ய வேண்டும்". —யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்.

05.05.89 (வீரகேசரி)

முல்லைத்தீவு வண்ணன்குளம் பகுதியில் புலிகளுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்குமிடையிலான மோதலில் நகுலன் என்ற ஈ.பி.ஆர்.எவ் உறுப்பினரும் அன்பு, வாசன் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.
கிளிநொச்சி பிரஜைகள் குழுச் செயலாளர் ஆ.பஞ்சலிங்கம் இனந்தெரியாதேதாரால் கொல்லப்பட்டார்.

சாவகச்சேரி சங்கத்தானையில் பாலராசு என்பவரின் சடலம்காணப்பட்டது.

06.05.89 (திசை)

யாழ் அரசாங்க அதிபர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

07.05.89 (வீரகேசரி)

ரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திற்கு அருகில் சுந்தரலிங்கம் யோகநாதன் என்பவரின் சடலம்காணப்பட்டது.

கட்டைப்பறிச்சானில் இராணுவத்தினரின் தாக்குதலினால் சுமார் 75 பொதுமக்கள் காயமடைந்தனர். பலர் காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

09.05.89 (வீரகேசரி)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அருமைநாயகம் என்பவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

பல்கலைக்கழக மாணவர்களைக்கண்டபடி காரணமின்றிக் கைது செய்தல், அவர்களைத் தாக்குதல், சுட்டுக்கொல்லுதல் ஆகியவற்றைக் கண்டித்துயாழ் பல்கலைக்கழக மாணவ மன்றத்தினர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

கட்டைப்பறிச்சான் சேனையூரில்வாழும் கிராமவாசிகள் இராணுவத்தால் தாக்கப்பட்டு வருகின்றனர்.

12.05.89 (வீரகேசரி)

மூனா ர் நாவலடிச் சந்தியில் சண்முகநாதன் என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினரும், பொத்துவிலில் விஜயசிங்கம் என்ற உறுப்பினரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

15.05.89 (வீரகேசரி)

தமது இயக்கத் தோழர் குகதாஸ் கொலை செய்யப்பட்டதை ஈரோஸ் கண்டித்துள்ளது.

www.tamilarangam.net

பண்டாரவளை, குருத்தலாவ, இங்குறுக பகுதிகளிலுள்ள முஸ்லீம்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளனர். 15க்கும் மேற்பட்ட வீடுகள் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நெடுங்கேணியில் இந்திய இராணுவத்தினரின் செல் தாக்குதலின்போது வேலு என்பவரும் இன்னொருவரும்கொல்லப்பட்டார்கள்.

09.05.89 (வீரகேசரி)

'இன்றுவரை இராணுவத்தினரின் கொலைவெறிக்கு 9 பல்கலைக்கழக மாணவர்கள் பலியாகியுள்ளனர். இத்தகைய கொலைத் தர்பாரை ஒருபுறத்தில் நடத்திக்கொண்டு மறுபுறத்தில் அமைதியைப் போதிப்பது பஞ்சசீலமாகாது. கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி இரவு இரண்டு மாணவிகள் உட்பட நான்கு மாணவர்கள் பல்கலைக்கழக சுற்றாடலிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளனர். வழமைபோல் இம் மாணவர்கள் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டதுடன் இரு மாணவிகளும் மின்சார சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். 30ஆம் திகதி கலைப்பீட மாணவனான சின்னத்துரை பிரபாகரன் இராணுவத்தால் கொல்லப்பட்டான். பல்கலைக்கழக மாணவர்களின் குரல்வளைகள் நெரிக்கப்படும்போதும், அப்பாவிப் பொதுமக்கள் துன்புறுத்தப்படும்போதும் தமிழ் மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதாகக் கூறிக்கொள்வோர் பார்த்துக் கொண்டிருப்பது விசித்திரமானது' யாழ்பல்கலைக்கழக மாணவர் சங்க அறிக்கை.

புத்தளம் மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் கடும் வரட்சியினால் சுமார் 25,000 விவசாயிகளின் கமச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

10.05.89 (வீரகேசரி)

இளைப்பாறிய பாடசாலை அதிபரும், சட்டத்தரணியுமான வல்லிபுரம் மகாலிங்கம் நெல்லியடியில் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சடலத்தின் அருகே 'இந்தியப்படைகளுடன் தொடர்பு வைத்திருந்தமைக்கான தண்டனை' என்ற புலிகளின் அறிவிப்புக் காணப்பட்டது.

11.05.89 (வீரகேசரி)

முரசொலி தினசரிப் பத்திரிகை ஆசிரியர் திருச்செல்வத்தின் மகன் அகிலன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பண்டாரவளை தமிழ்மகாவித்தியாலய அதிபரை இடமாற்றம் செய்யுமாறு ஆசிரியர்கள் பகிஷ்கரிப்புச் செய்தனர். வகுப்புகளைப்பகிஷ்கரிக்கும் ஆசிரியர்களையும், அதிபரையும் இடமாற்றம் செய்யுமாறு கோரி மாணவர்களும் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

இரத்தினபுரி அயகம மகாவித்தியாலய மாணவர் சமன் ஆயுதமேந்திய சிலரால் கடத்திச் செல்லப்பட்டதையடுத்து இந் நகரப் பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

12.05.89 (வீரகேசரி)

வெலிஓயாவில் அரசினர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச மதிய உணவில் நச்சுத்தன்மை காரணமாக அதனை உட்கொண்ட 80 மாணவர்கள் திடீரென வாந்தியெடுத்து மயக்கமடைந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

16.05.89 (வீரகேசரி)

அக்கரைப்பத்தனை டயகம தோட்டப்பகுதியில் இராணுவம் முகாமிட்டிருப்பதை ஆட்சேபித்து அப்பகுதியைச் சேர்ந்த 20,000தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்செய்கின்றனர்.

நெடுங்கேணியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இந்திய இராணுவத்தினரின் தேடுதல் இடம்பெற்றுவருகிறது. இதன்போதான துப்பாக்கிப் பிரயோகத்தில் கோட்டலில்வேலை செய்பவர்களான பொன்னையா, தேவராசா ஆகியோர் கொல்லப்பட்டனர். 7 வீடுகள் எரிக்கப்பட்டதுடன் செல் தாக்குதலினல்பல வீடுகள் சேதமடைந்துள்ளன. கெலிக்கொப்ரர் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

கல்லோயாக் குடியேற்றக்கிராமத்தில் ஜோதிபாலா என்பவரும், அவரின் மகளான புஉஷ்பராணிஎன்பவரும் கோரமாக வெட்டிக்கொலைசெய்யப்பட்டார்கள்.

தமிழீழவிடுதலைப்புலிகளால்கொல்லப்பட்டிருக்கும் பொதுமக்கள், கிராமவாசிகள், அரசியல் தலைவர்கள், போராளிகள், புத்திஜீவிகள் ஆகியோர்களின் ஆதாரபூர்வமான பட்டியல் ஒன்றை விரைவில் வெளியிட உள்ளதாக ஈ.தே.ஐ.வி.மு அறிவித்துள்ளது.

18.05.89 (வீரகேசரி)

யாழ் மாவட்டத்திலிருந்த இந்திய இராணுவத்தினர் திருப்பியழைக்கப்பட்டு புதிய இராணுவத்தினர்வந்து சேர்ந்ததும் தேடுதல் வேட்டைகள் தீவிரமடைந்துள்ளன. நீர்வேலிப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சரோஜினிதேவி கனகசபை என்ற 3பிள்ளைகளின் தாயும் கிருஉஷ்ணபிள்ளை சிவானந்தா என்ற மாணவரும் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

பொலநறுவையில் பாடசாலை அதிபர் சுட்டுக்கொல்லப்பட்டதைக்கண்டித்து 4பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்புகளைப்பகிஉஷ்கரிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வந்த மினிபஸ் இறம்பாவைக்கும், மதவாச்சிக்குமிடையில் வழிமறிக்கப்பட்டுகொள்ளையடிக்கப்பட்டதுடன் 6 பிரயாணிகள் கத்திவெட்டுக்கு இலக்காகினர்.

1987 பெப்ரவரிக்கும் ஜூனுக்குமிடையில் பிரிட்டனுக்கு வந்து அரசியல் தஞ்சம் கோரிய 5 தமிழர்கள் 1988 பெப்ரவரியில் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். இலங்கையில் இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்களென பிரிட்டிஉஷ் பத்திரிகைகள் செய்திகளைவெளியிட்டுள்ளன. பிரிட்டனில் தமிழர்களுக்காக வாதாடிய சட்டத்தரணிகள் இலங்கைக்கு விஜயம்செய்து நாடுகடத்தப்பட்டவர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளதையும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதையும் அறிந்து வந்துள்ளனர்.

கோமாரிப் பகுதியில் சதாசிவம்ரவிச்சந்திரன், பொடிசிங்கம் விஜயராஜா என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

கலகெதரப் பொலிஸ் பகுதியில்இரு குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் வெட்டியும், அடித்தும் கொல்லப்பட்டனர்.

19.05.89 (வீரகேசரி)

கோண்டாவில் பகுதியில் இந்தியஇராணுவத்தினருடனான மோதலில் ஜெயகரன் எனப்படும் விடுதலைப்புலிஇயக்க வாலிபர் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் ஆயுதக் கோஉக்டியினால் கடத்தப்பட்ட இருவரில் இ.சுகுணம் என்பவர் கொல்லப்பட்டார்.

5நாள் தொடர்ச்சியாக நெடுங்கேணியில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து அக் கிராமவாசிகள் அசம்பாவிதங்களில் பலியானோரின் சடலங்களை மீட்கும் பணியில் உடனடியாக ஈடுபட்டு இவரின் சடலங்களை மீட்டுள்ளனர். இவர்களில் ஆறுமுகம், கந்தையா, தனபாலசிங்கம் ஆகியோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்மாந்துறைப்பகுதியில் தலைதூக்கியுள்ள கோஉக்டிமோதல் காரணமாக தமிழ், முஸ்லீம் சமுகங்களைச் சேர்ந்த பலர் இருப்பிடங்களைவிட்டு பொது இடங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். 17.05.89 இல் சம்மாந்துறை தமிழ் டிவிசனில் 15வீடுகள் கோஉக்டியொன்றினால் எரிக்கப்பட்டு, வீடுகள் சூறையாடப்பட்டதைத் தொடர்ந்து சுமார்1,000 தமிழ் அகதிகள் தபாற்கந்தோரில் தஞ்சமடைந்துள்ளனர். சம்மாந்துறை எல்லையிலுள்ள வீரமுனைக்கிராமத்தைச் சேர்ந்த சுமார்2,000 பேரும் இடம்பெயர்ந்து கோயிலில் தஞ்சமடைந்துள்ளனர். சம்மாந்துறை முஸ்லீம்களில் 5,000பேர் 11 பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில்18ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. 2,500பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இங்கு வாழும் மக்களில்15 சதவீதத்தினரே 3வேளை உணவுண்பவர்களாக வாழுகிறார்கள்'- கிழக்கிலங்கை புனர்வாழ்வுநிறுவனஇணைப்பாளர்.

சம்மாந்துறை அகதிகளுக்கு உணவு கொண்டு சென்றவர்கள்மீது கோஉக்டியொன்று தாக்குதல் நடத்தியதில் ஈ.என்.டி.எல்.எப்பைச் சேர்ந்த தவமணி என்பவர் கொல்லப்பட்டார்.

மூதூரில் வீடுகளுக்குள் புகுந்தஆயுதபாணிகள் அங்கிருந்தவர்களில் நால்வரை வெட்டிக் கொன்றனர். மூவரை காயப்படுத்தினர்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் 200க்கு மேற்பட்ட முஸ்லீம்களின் வீடுகள் எரிக்கப்பட்டிருப்பதாகவும், இருவர் கொல்லப்பட்டிருப்பதாகவும், 20000 முஸ்லீம்கள் அகதிகளாக்கப்பட்டிருப்பதாகவும் சிறலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

17.05.89 (வீரகேசரி)

நாவலப்பிட்டி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஊர்க்காவல்படையினரை அகற்றுமாறு கோரி 34தோட்டங்களைச் சேர்ந்த 15,000தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்தில் வி.ரவிக்குமார், வேலுப்பிள்ளை என்ற இருவரின் சடலங்கள் இந்திய இராணுவத்தினரால் யாழ் ஆஸ்பத்திரியில் கொடுக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறையில் ஏ.ஸி.ஜலால்தீன் என்பவர் இனந்தெரியாதவர்களால் அழைத்துச்செல்லப்பட்டபின் அவரது சடலம் வயல்வெளியில் கண்டெடுக்கப்பட்டது.

திருகோணமலையில் எஸ்.சிவேந்திரன், கே.நவரத்தினராஜா என்ற இருவர் சீருடையில் இருந்தோரால் கால்களும், கைகளும் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

12.05.89இல் திருகோணமலை சீனன்குடாவில் 12இந்தியப்படையினரைக் கண்ணிவெடி மூலம் கொன்றதற்கு ஜே.வி.பியின் ஆயுதப் பிரிவான தேசபக்தமக்கள் முன்னணி உரிமை கோரியுள்ளது.

21.05.89 (வீரகேசரி)

நெடுங்கேணியில் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டதில் விடுவிக்கப்பட்ட 9பேர் தங்களுடன் கைது செய்யப்பட்ட தேவரூபன்என்ற மாணவன் கொலை செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தனர். உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்கவும் இந்திய இராணுவம் மறுத்துவிட்டது.

ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் இந்திய இராணுவத்தினரின் தேடுதல்வேட்டையின்போது கைதான 6 இளைஞர்களில் பொ.ஜெகதீசன், செ.சிவலிங்கம் ஆகிய இருவரும்சடலமாக பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புத்தூர் வராவத்தைப் பகுதிகளில் தேடுதல்களின்போது 25பேர்தாக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இப்பகுதிகளைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

வரணிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு நடந்ததேடுதலில் தாக்குதல்களுக்குள்ளானபலர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

22.05.89 (வீரகேசரி)

மூதூர் ஆஸ்பத்திரிக்குள் புகுந்த கோஷ்டியொன்று அங்கிருந்ததாதி ஒருவரைத் தாக்கியதுடன் கட்டடத்திற்கும், மருந்துகளுக்கும் சேதமேற்படுத்தியது. இதனையடுத்து அங்கிருந்த நோயாளிகள் அனைவரும் வாட்டுகளைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளனர். ஆஸ்பத்திரி ஊழியர்களும் கடமைக்கு வர மறுத்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணசபையின் வவுனியா மாவட்ட உறுப்பினரான சிவபாலராஜ் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்.

அட்டன் பிரதேச மலையக முன்னணியின் அமைப்பாளர் சந்திரசேகரன் டிக்கோயா நகரிலுள்ள அவரதுவீட்டிலிருந்து இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டார்.

தமிழ்ப் போராளிகளுடன் சண்டையிடுவதற்காக விசேடமாகப் பயிற்றப்பட்டு பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்பின் முகாமினுள் வைக்கப்பட்ட இலங்கைவிசேட அதிரடிப் படையினர் மீண்டும் நடவடிக்கைக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளில் இறங்கியுள்ளதாக பத்மநாபா சென்னையில் குற்றம் சாட்டினர்.

மாத்தளை—திருமலை வீதியைப் புனரமைத்துவரும் கொரியநாட்டுகொம்பனியில் கடமையாற்றும் 400ஊழியர்கள் தமது சகதொழிலாளி அக்கொம்பனியின் கொரியநாட்டு உத்தியோகத்தராலும், இன்னொரு ஊழியராலும் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

தனது உறவினர்கள் நால்வரைஒரே இரவில் சுட்டுக்கொலை செய்தஇனந்தெரியாத ஆயுதபாணிகள் தன்னையும் சுட்டுக்கொலை செய்துவிடுவார்கள் என அஞ்சி பதுங்கி வாழ்ந்த காமின் என்ற இளைஞரை இனந்தெரியாத நபர்கள் சுட்டும், வாளினால் வெட்டியும் கொன்றனர்.

24.05.89 (வீரகேசரி)

புத்தூரில் இடம்பெற்ற தேடுதலின் போது ஏலந்தனையில் கைதுசெய்யப்பட்ட துரைசிங்கம் உதயகுமார் என்பவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார். இந்த இளைஞருடன்கைது செய்யப்பட்ட சந்திராதேவி என்ற இளம்பெண் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரியாமல் இவரது தந்தை கனகு தேடியலைந்து விட்டு மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

வவுனியா பண்டாரிக்குளத்தில் வைத்து இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்ட மாகாணசபை உறுப்பினரை விடுவிக்கும்படி கோரி வவுனியாப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்புகளைப் பகிஸ்கரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குஎல்லைப் புறத்தேயுள்ளமகாஓயா வோகம்பாய காட்டுப் பிரதேசத்தில் வனதிணைக்களத்தால் பல வருடங்களுக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட 3,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தேக்குத் தோட்டங்களை அழித்துவிட்டு, அப்பகுதியை குடியேற்றப் பிரதேசமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாயும், அதற்கான உத்தரவு அம்பாறை வனபரிபாலன காரியாலயத்திற்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தோட்டங்கள் அழிக்கப்பட்ட பின்னர் இப்பகுதியில் பெரும்பான்மையினத்தவர்கள் குடியேற்றப்படவுள்ளார்களாம்.

20.05.89 அதிகாலை முள்ளிக்குளத்தில் தங்கிப் புனரமைப்புவேலைகளில் ஈடுபட்டிருந்த புளொட் உறுப்பினர்கள் மேலும், ரெலா உறுப்பினர்கள் மேலும் புலிகள் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் இரு தரப்பிலும் 35பேர் கொல்லப்பட்டுஐவர் காயமடைந்ததாக புளொட் அறிவித்துள்ளது.

25.05.89 (வீரகேசரி)

திருகோணமலை சீனன்குடா புகையிரதநிலைய ஊழியரான பி. தேவராஜா இந்தியப்படையினரால் மேலதிக புலன் விசாரணைகளுக்கென இலங்கைப்பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா கொரவப்பொத்தானை வீதியில் உள்ள மதுபானக்கடையின் உரிமையாளரான வேலாயுதம் பார்த்தீபன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மே 15 வரையிலான வடக்கு கிழக்கு சம்பவங்கள்

- ருமது சிருபர் -

25.04.89: கறுவாஞ்சிக்குடியில் மகேந்திரன் என்பவர் கொல்லப்பட்டார்.

28.04.89: நல்லூரில் சண்முகநாதன் என்பவர் புலிகளால் கொல்லப்பட்டார்.

29.04.89: செங்கலடி ரெலோ முகாமுக்கருகில் உமாலெப்பை என்ற ரெலோ உறுப்பினர் குண்டுவீசிக் கொல்லப்பட்டார்.

01.05.89: முல்லைத்தீவில் யேசு எனப்படும் பொன்னம்பலம் என்றரெலோ உறுப்பினர் கொல்லப்பட்டார்.

08.05.89: வல்வெட்டித்துறையில் இளைப்பாறிய தபால் அதிபரான அருட்பிரகாசம், அவரது மனைவி உட்பட குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்.

02.05.89: இரணைமடுவில் 3 பிள்ளைகளின் தந்தையான நந்தகுமார் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

02.05.89: வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்மன்றத்திற்குள் புகுந்த இந்திய இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த கணேசமூர்த்தி, கிளிநொச்சியைச் சேர்ந்த கமலவதனி ஆகியோர் கொல்லப்பட்டனர். 6பேர் காயமடைந்தனர்.

04.05.89: கோபாலகிருஷ்ணன் என்பவர் அவரது வீட்டிலிருந்து இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். பின்னர் இவரது சடலம் வீட்டாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

04.05.89: வல்வெட்டித்துறையில் மாணிக்கம் என்ற இளைப்பாறிய ஆசிரியரும், மருதங்கேணியில் கந்தசாமி என்பவரும் கொல்லப்பட்டனர்.

29.04.89: யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் ஓமந்தையில் இந்திய இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்திய இராணுவத்துடன் நின்ற ஆயுதபாணிகள் பயணிகளை விசாரணைக்குட்படுத்தி மூவரைக் கைதுசெய்தனர்.

ஏப்ரல் 89: பூநகரி முழுங்காவிலில் சுள்ளி பொறுக்கச் சென்ற ராசையா கிருஷ்ணபிள்ளை, சிறரங்கன் சந்திரபாலா ஆகியோர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

01.05.89: தாவடியில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதலின் பின் இந்திய இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட 8 பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் பின்னர் சடலமாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

01.05.89: பருத்தித்துறையில் பரதராஜன், ஜெகதீசன், வடிவேலு என்ற புலி உறுப்பினர்கள் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

01.05.89: சுளிபுரத்தில் ராசரத்தினம் என்ற முதியவர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

02.05.89: பருத்தித்துறையில் இந்திய இராணுவத்தின் மீதான தாக்குதலின் பின் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல வீடுகளும், கடைகளும் செல் தாக்குதலால் சேதமாக்கப்பட்டன. பல வீடுகள் குண்டு வைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டன. வேலுப்பிள்ளை என்பவரின் கருகிய சடலம் கண்டெடுக்கப்பட்டது. குட்டி என்ற புலி உறுப்பினரும் கொல்லப்பட்டார்.

02.05.89: கைதடி இந்திய இராணுவ முகாம் தாக்கப்பட்டபின் அவ்வழியால் வந்த பஸ் வழிமறிக்கப்பட்டு பெண் பயணிகள் நடந்து போகும்படி பணிக்கப்பட்டனர். ஆண் பயணிகள் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

05.05.89: வவுனியாவில் யோகலிங்கம் என்பவர் கொல்லப்பட்டார்.

06.05.89: கல்வியங்காட்டில் யோகராஜா என்பவரும், இன்னொரு பெண்ணும் புலிகளால் கொல்லப்பட்டார்கள்.

07.05.89: பளையில் தனேஊக் என்பவர் கொல்லப்பட்டார்.

09.05.89: நல்லூரில் ஒரு பெண்ணும், இணுவிலில் ஒரு ஆணும் கொல்லப்பட்டனர்.

11.05.89: கொட்டடியில் சபாரத்தினம் என்பவர் கொல்லப்பட்டார்.

13.05.89: சூறுவத்தையில் தவநேசன், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

## இந்திய இராணுவத்தால் மாணவர் கொலை

கருவாஞ்சிக்குடியில் பேராதனைப் பல்கலைக்கழக இரண்டாம்வருட மாணவரான ஆர். நீதிநாதன் என்பவர் இந்திய இராணுவத்தால் 20.02.89இல் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின் இவர் விடுவிக்கப்படுவாரென இவரின் மனைவி நம்பியிருந்தார். மறுநாள் மனைவியை இராணுவ முகாமுக்கு வருமாறு அழைத்த இந்திய இராணுவத்தினர் பின்னர் விரட்டியடித்தனர். விரட்டப்பட்ட மனைவியிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் அவரது கணவர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டுவிட்டதாகவும், சடலம் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். இச் சம்பவம்நீதிமன்றத்திலும் விசாரணைக்கெடுக்கப்பட்டு, இந்திய இராணுவத்தை நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கும்படி பணிக்கப்பட்டாலும் பின்னர் இது புறக்கணிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முரசொலி பத்திரிகை ஆசிரியரின் மகனின் கொலை

10.05.89 அதிகாலை நல்லூரில் உள்ள முரசொலிப் பத்திரிகை ஆசிரியர் திருச்செல்வத்தின் வீட்டுக்கு வந்த மூவர் அவரை வெளியே வரும்படி அழைத்தனர். அவர்கள் கையிலிருந்த துப்பாக்கியைப் பார்த்த திருச்செல்வம் பாதுகாப்பைத் தேட முயற்சித்துக் கொண்டிருக்கும்போது, அப்போதுதான் நித்திரை விட்டெழும்பி வந்த அவரின் 19 வயதான மகன் அகிலன் மூவரின் கையிலும் சிக்கிவிட அவர்கள் அவனைக் கடத்திப் பின்னர் கொலை செய்தனர். தைரியமாகச் செய்திகளை வெளியிடும் பத்திரிகையாக முரசொலி பலராலும் அறியப்பட்டிருந்தது. அகிலனின் மரணச் சடங்கின்போது போலி ஜனநாயகவாதிகளே இக் கொலையாளிகள் என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இக் கொலையைக் கண்டித்து அனைத்துப் பாடசாலைகளும் பூட்டப்பட்டிருந்தன.

## மாணவர் தலைவர் கொலை

யாழ் மத்திய கல்லூரி மாணவனான கோபாலகிருஷ்ணன் உடுவிலிலுள்ள அவரது வீட்டிலிருந்து ஆயுதபாணிகளால் விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டார். அடுத்தநாள் இவரின் சடலம் இவரது வீட்டிலிருந்து 2 கி.மீற்றர் தூரத்துக்கப்பால் காணப்பட்டது. கோபாலகிருஷ்ணன் இளைஞர், மாணவருக்கான பொதுச்சங்கத்தின் மாணவர் தலைவர் ஆவார். சென்ற் ஜோன் கல்லூரி சக மாணவனான அகிலனின் கொலையைக் கண்டித்து (திருச்செல்வத்தின் மகன்) அனைத்து பாடசாலைகளிலும் மூடவைப்பதில் இவர் மும்முரமாக ஈடுபட்டார்.

---

**பிந்திய செய்திகள்:**

**கேகாலை, இரத்தினபுரிப் பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவு, வெள்ளப் பெருக்கினால் 250 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். 700பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர். சுமார் 1,50,000 பேர் வீடுகளை இழந்துள்ளனர். உத்தியோகபூர்வ செய்திகளின்படி 70பேர் இதுவரை மண்புதைவிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்கள். 200 பேர் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு வேலைகளுக்கென தொண்டர்படைகளும், மருத்துவ உதவிகளுக்கென வைத்தியர்களும் இப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகச் செய்திகள்

தொகுப்பு : க. பூபாலச்சந்திரன்

நைஜீரியாவில் இராணுவ ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து மக்கள் ஆர்பாட்டம் செய்தனர். இதை அரச படைகள் அடக்க முயற்சி செய்ததில் ஐவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

வியட்நாமில் வீசிய கடும் புயலினால் 20 பேர் கொல்லப்பட்டனர். 1இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

வங்காள தேசத்திலும் கடும் புயல் வீசியதால் 35 பேர் கொல்லப்பட்டனர். 10ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்.

உலக சுகாதார நிறுவனத்தில் பலஸ்தீனர் அங்கம் வகிக்க விண்ணப்பித்ததைய்த்து அமெரிக்கா பயமுறுத்தியதின் விளைவாக இவர்களை அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்வதை இந்த நிறுவனம் தற்காலிகமாக ஒரு வருடத்திற்குப் பின்போட்டுள்ளது.

ஈராக் படைகளுக்கும் குர்டிஸ் கெரில்லாக்களுக்குமிடையில் கடும் சண்டைநடைபெற்று வருகிறது.

வியட்நாமிலிருந்து தப்பிய 170 அகதிகள் மலேசியா கடற்பகுதியில் கடற்கொள்ளையரால் கொல்லப்பட்டனர்.

சோவியத் யூனியனின் ருக்மேனியாப் பிராந்தியத்தில் விலைவாசிகள் கூடியதையிட்டு மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கடைகளுக்குத் தீ வைக்கப்பட்டன. 100 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

தென்கொரிய அரசை எதிர்த்துவரும் மாணவர்களால் பணயக்கைதிகளாகவைக்கப்பட்டிருக்கும் பொலிசாரை மீட்கச் சென்ற பொலிசார் மாணவருடன் மோதி பின்னர் கட்டிட ஜன்னலால் வெளியே பாய்ந்து தப்பியோடினர். இதில் 6பொலிசார் மாண்டனர்.

மேற்கு ஜேர்மனியில் சிறையிலிருக்கும் ஆர். ஏ. எப் என்ற சிவப்பு இராணுவத்தினர் தங்களை ஒரே இடத்தில் இருக்க அனுமதிக்கும்படி கோரி நடாத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக தலைநகரான பொன்னில் 5,000 பொதுமக்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

தென்னாபிரிக்கா காடுகளிலுள்ள யானைகளைக் கொன்றழிக்கும் தந்த வியாபாரிகளுக்கு தென்னாபிரிக்க அரசே உடந்தையாக இருந்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறுகதை

# கிழவனின் மரணம்

-சோலை மைந்தன்-

ஊரின் ஒதுக்குப் புறத்தில் அமைந்திருந்தது அந்தச் சிறிய குடிசை. சுற்றிலும் ஆங்காங்கே சில மரங்களைத் தவிர வேறு குடிசைகளோ, வீடுகளோ இல்லை. தனிமையாக இருந்த அந்தக் குடிசையில் தனியனாகப்பல காலம் வசித்து வருகிறான் கிழவன். நோய் வந்து அவன் மனைவி காலமான பின்பும் திடகாத்திரமாக இருந்தவன் இப்போது மரணப் படுக்கையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

கடந்த மூன்று நாட்களாகவே கிழவனுக்கு உடல்நிலை மோசமாகியிருந்தது. அடிக்கடி வயிற்றை வலித்துக் கொண்டிருந்தது. வயிற்றுப்போக்குக்குக் கூட வெளியில் சென்றுவர முடியாமல் படுக்கையிலேயே அனைத்தும் நடந்தது. உடம்பு மிகவும் இளைத்துப் போய்விட்டது. கண்கள் மிகவும் சோர்வாய், எல்லாமே பார்ப்பதற்கு மங்கலாய் காணப்பட்டது. கிழவியிருந்திருந்தால் தேநீராவது வைத்துக் கொடுத்திருப்பாள். அருகில் குவளையில் கொஞ்சம் தண்ணீர் மட்டுமிருந்தது. சாப்பாடு கூட எதுவுமில்லை. இரண்டு நாளைக்கு முதல் சமைத்த கஞ்சி பானையில் புளித்துப்போய் கிடந்தது.

இனி தன்னால் உயிர் வாழ முடியாதென்று மட்டும் கிழவனுக்கு நிச்சயமாய் விளங்கிவிட்டது. வயதும் சாகிற வயதுதான். பிறந்த ஆண்டு தெரியாவிட்டாலும் வயது தொண்ணூறைக் கடந்திருக்கும் என்று ஒரு கணிப்பு மட்டும் வைத்திருந்தான். இதுவரையில் இயலுமானவரை யாருடைய உதவிகளுமின்றியே தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தான். ஆனால் இப்போதோ உதவி தேவைப்பட்டாலும், யாரும் உதவி செய்ய வரப் போவதில்லை. எல்லோரும் கிழவனிற்கு அந்நியமாகிப் போய்விட்டார்கள்.

இந்தக் கடைசிக் காலத்தில் கிழவன் தனியனாய் இருக்க வேண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டியதை எண்ணி மனதிற்குள் வேதனைப்பட்டுக் கொண்டான். தனது இரண்டு பிள்ளைகள் கூட தன்னைவிட்டுத் தூர விலகி எந்தத் தொடர்பும் இல்லாம ற்போனதுதான் கிழவனுக்கு நிறையவே கவலையைத் தந்தது.

கிழவி செத்துப்போனபின், கிழவியின் சொத்தாகக் கிடந்தஇர ண்டு காப்பையும், தாலிக்கொடியையும் விற்று, கிழவனும், பிள்ளைகளும் பிரித் தெடுத்துக் கொண்டனர். மிச்சமாய் கிடந்த ஒரு துண்டுக் காணியை கிழவன் விற்று தனது வாழ்க்கைக்குப் பயன்படுத்தினான். கிழவனிடம் சொத்தாயோ, பணமாயோ எதுவும் இல்லையெனத் தெரிந்ததும் பிள்ளைகள் கிழவனை ஒது க்கிவிட, ஊரின் ஒதுக்குப்புறமாய் ஒரு குடிசை அமைத்து, அதில் வாழ்ந்து கொண்டிருந்தான்.

கிழவனிடம் ஏதாவது இருந்திருந்தால் அவனது பிள்ளைகளோ, உறவினரோ அல்லது ஊரில் உள்ள யாராவது கிழவனைக் காப்பாற்றியிருப் பார்கள். முடிந்தவரையில் இறுதிச் சடங்கை செய்தாவது கிழவனிடம் இருந் ததை எடுத்திருப்பார்கள். கிழவன் தனது இறுதி நேரத்தில் தன்னை நேசிக் எவருமில்லையேயென்ற மனச்சுமையால் கவலைப்பட்டான். கண்கள் ஓரத்தில் ஈரம் கசிந்திருந்தது.

'சீ என்ன உலகம். காசும், பொருளும் இருந்தாத்தான் மனு சன். இல்லையெண்டால் மனுசனுக்கு மதிப்பில்லை. மனுசனை மனுசன் நேசிக்க றதுக்கு இந்த உலகத்திலை காசும்.. பொருளும்தான் தேவையாயிருக்கு. ஒரு காலத்திலை நான் மதிப்பாய் பொருள், பணத்தோடை இருக்கேக்க என்னைத் தேடி வருவாங்கள். ஆனால் என்னட்டை ஒன்றுமில்லையெண்டதும் எல்லாரும் என்னை ஒதுக்கியிட்டாங்கள். மனுசனை மனுசன் மனித நேயத் தோட மதிச்சு, எல்லாரும் சமமாய் வாழேக்கதான் காசுக்கும் பொரு க்கும் மதிப்பிருக்காது.' கிழவன் சலித்துக் கொண்டான்.

சாகப்போகும் நேரத்தில் வாழ்க்கை சலிக்கக் கூடாதென்று நினைப்போடு, தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையை நினைத்துப் பார்த்தான்.

வண்டிக்கார விசுவநாதன் என்றால் அந்தநாளில் அந்த ஊரில் தெரியாதவர்கள் யாருமில்லை. அந்தளவிற்கு ஊரில் நல்ல விலாசம். சவா ரிக்கென்றே காளைமாடுகளை வளர்த்து, சவாரி மாடுகள் காட்டியே தன துமதிப்பை ஊருக்குள் உயர்த்திக் கொண்டவர்.

எந்த இடத்தில் சவாரிப் போட்டி நடந்தாலும் விசுவநாதன் வராமல் வண்டிச் சவாரியே களைகட்டாது என்ற மாதிரி அவருக்கென்று ஒரு ரசிக கூட்டமே இருந்தது.

வண்டிச் சவாரியில் தனது மாடுகளுக்குப் போட்டியாகவிருந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்லத்துரையரின் மாடுகளுக்கு யாருக்கும் தெரியாமல் கால்களை வெட்டியதை இப்போது நினைக்க விசுவநாதன் என்ற கிழவனுக்கு வெறுப்பு வந்தது.

கிழவன் பாயில் கிடந்த துணித்துண்டினுல் முகத்தை மெதுவாகத் துடைத்தான். சுவாசிக்கச் சிரமமாயிருந்தது.

அந்த நாளைய வண்டிக்கார விசுவநாதன் வண்டிச் சவாரிக்காக மாடுகளைப் புதிதாக வாங்குவதும், விற்பதுவுமாகவிருந்ததால் பொருளில் நஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனால் மனதில் மட்டும் மரியாதையை காப்பாற்றியே தீர வேண்டும்என்ற பிரயாசை இருந்ததால் தன்னிடம் இருந்த பணம், சொத்துகளைச் செலவழித்துத் தீர்த்தார்.

ஊரில் ஒரு வாய் சோற்றுக்கே பல ஏழை மக்கள் திண்டாடும்போது இவர் சவாரி விளையாட்டுக்காக பிண்ணாக்கும், தவிடும், சோற்றுக் கஞ்சியுமாக மாடுகளுக்குக் கொடுத்து அவைகளை ஊட்டி, ஊட்டி வளர்த்தார். ஊரில் நடக்கும் எதிலுமே அக்கறையில்லாமல் சவாரியில் மட்டுமே கவனத்தைச் செலுத்தி வந்தவர் இறுதியில் ஒருவேளை உணவுக்குத் திண்டாட விட்டாலும் சீவியத்தைச் செலுத்த சிரமப்படும் நிலைக்கு வந்துவிட்டார்.

'வறுமைக்கும் மனுசனுக்கும் நீண்ட உறவிருக்கு. பணக்காரனையிருக்கேக்கை வறுமையின் கொடுமையை உணரேல. இப்ப வறுமையில வாடேக்கதான் வறுமை என்னவெண்டு விளங்குது...'

இளவயதில் இளமை சுகங்களில் திளைத்து இப்போது கிழவனாய் போய்விட்ட விசுவநாதனுக்கு வறுமையும், தனிமையும் வாழ்வின் சில உண்மைகளை உணர்த்திக் கொண்டிருந்தன.

எவ்வளவோ சனங்கள் கஷ்டத்தில வாழேக்க, சிலர் மிதமிஞ்சி ஆடம்பரங்களில வாழுறதும், மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டி வாழுறதும், மனுசனை மனுசன் அடக்கி ஒடுக்கி வாழுறதும்.... இப்போதுஇவையெல்லாம் அநியாயமாய் பட்டது.

இந்த அநீதிகளுக்கெல்லாம் முடிவொன்று வரவேண்டும். மனித சமூகத்திற்கு மாற்றமொன்று தேவை என கிழவனின் மனம் நேசமாய் நினைத்துக் கொண்டது.

கிழவன் மெதுவாகப் படுக்கையைவிட்டு எழப் பார்த்தான். கொஞ்சம் தேநீர் வைத்துக் குடித்தால் எவ்வளவோ சுகமாய் இருக்கும் போலிருந்தது. ஆனால் முடியவில்லை. தலை இலேசாய் சுற்றுவது போலிருந்தது. பஞ்சடைந்த கண்களால் தெளிவாகக் குடிசையைப் பார்க்க முயன்றான். குடிசைக் கயிற்றில் வேட்டி மட்டும் மங்கலாய் தெரிந்தது. காதைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூர்மையாக்கிக் கேட்க முயன்றான். எங்கிருந்தோ சில குருவிகளின் கீச்சுச் சத்தங்கள் மட்டும் கிழவனுக்குத் துணையாய் இருப்பதாய் கேட்டுக் கொண்டிருந்தது.

நாக்கு வறண்டுகொண்டிருந்தது. அருகில் கிடந்த குவளைத் தண்ணீரை நடுங்குகின்ற கைகளால் வாய்க்குள் பருக்கினான். தண்ணீர் தொண்டையைவிட்டு கீழிறங்குவதாயில்லை. நெஞ்சு ஆழமாய் மேலெழும்பிக் கீழிறங்கிக் கொண்டிருந்தது.

சூரியனும் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தான். கிழவன் கண்களை மெல்ல மெல்ல மூடித் திறந்தான்.

திடீரென தூரத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டன. அதன் ஒலி பெரிதாகவிருந்தாலும் கிழவனுக்கு கொஞ்சமாகவே கேட்டது.

அவனுக்கு விளங்கிவிட்டது.

அநேகமாக இராணுவம் ஊரைச் சுற்றி வளைத்து தேடுவதாக நினைத்துக் கொண்டான். அல்லது இளைஞர்களும் இராணுவமும் சண்டைபோடுவதாயிருக்கும்.. சிலவேளை இளைஞர்களும், இளைஞர்களும் சண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டைபோடுவதாயுமிருக்கும்.

முன்பென்றால் வாணவேடிக்கை, ஏதாவது கொண்டாட்டங்களில் வெடிச் சத்தம் கேட்கும். பிரேத ஊர்வலத்தின்போதும் வெடிச் சத்தம் கேட்கும். ஆனால் இப்போ காலம் மாறி சண்டை... சச்சரவுகளுக்கென்றே வெடிச் சத்தம் கேட்பது வழமையாகிவிட்டது.

'சாகக் கிடக்கேக்கையும் நிம்மதியாய் சாகவிட மாட்டாங்கள் போலக் கிடக்கு"

வெடிச் சத்தங்களின் ஓசை இப்போது அண்மையில் கேட்பது போலிருந்தது. கிழவனின் மனம் வெடிச் சத்தங்களின் நினைவுகளில் சென்றது.

'எங்கட பெடியள் நாடு கேக்கப் போராடி ஒன்டையும் உருப்படியாய் கண்டதாயில்லை. உயிருகள் அநியாயமாய் சாகிறதுதான் மிச்சம். சனந்தான் நிம்மதியாயில்லை. எத்தினை அநியாயங்கள். என்னதான்நாட்டில நடக்குதெண்டு விளங்கிக்கொள்லேலாம கிடக்கு. எப்பதான் நாடு நிம்மதியாய் இருக்கப் போகுதோ?' கிழவன் சிரமப்பட்டு சுவாசித்துக்கொண்டிருந்தான்.

நான் போயிருவன்... ஆனா இந்த நாடும்.. சனங்களும்.. இறுதி நேரத்திலாவது நாட்டை, மக்களைப் பற்றி மனதிற்குள் வருத்தப்பட்டுக் கொண்டான். அந்த நினைப்பே தானும் இந்த சமூகத்திலே ஓர் அங்கம் என்பதைத் தெரிவிக்க கிழவன் அந்நியமாகாத ஒரு திருப்தியை அனுபவித்தான்.

உடம்பெல்லாம் குளிர்வது போலிருந்தது. நினைவுகளும் மெல்ல மெல்ல மங்கத் தொடங்கிவிட்டது. கஷ்டப்பட்டு சுவாசிக்கும் மூச்சு மெல்லிதான இழுப்புச் சத்தத்தைக் கொடுத்தது. இதயத்தின் துடிப்பு மெதுமெதுவாகக் குறைந்துகொண்டிருந்தது.

சிறிதுநேரம் தொடர்ச்சியாய் அவதிப்பட்ட கிழவனின் உடம்பு மெல்ல மெல்ல ஆட்டம் அசைவின்றி அடங்கிப் போக, ஊரில் தேடுதல் நடத்திக் கொண்டிருந்த இராணுவத்தினரின் கால்கள் குடிசைக்குள் நுழைந்தன.

"கிழவா.. ஏய் கிழவா.."

"கிழவா நித்திரையா?... எழும்பு எழும்பு"

இராணுவத்தினரில் ஒருவன் கிழவனது உடலைக் கால்களால் தட்டினான்.

"தூங்கிற மாதிரி நடிக்கிறதா?.. எழும்பு"

www.tamilarangam.net

"எழும்ப மாட்டான்"

"குடிசையை நல்லா செக் பண்ணு" இராணுவத்தினன் ஒருவன் கூறினன்.

கயிற்றில் தொங்கிய வேட்டியை இழுத்து நிலத்தில் எறிந்தார்கள். சட்டி, பானைகளை உடைத்தார்கள். குவளைத் தண்ணீரை கிழவனின் முகத்தில் வீசினர்கள். இதைவிட சோதனைபோட எதுவுமில்லை.

கிழவனின் கையைப் பிடித்து ஒருவன் இழுத்தான். முகத்தில் வெளிச்சத்தைப் பாய்ச்சினர்கள். அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது கிழவனின் உயிரற்ற உடம்பு மட்டுந்தான் இருக்கிறதென்று.

இராணுவத்தினர் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவர்களுக்கு கிழவன் செத்தது புதிராகவும் இல்லை. பிரச்சினையாகவுமில்லை. அவர்களுக்கு இது சகசமானதொன்று.

கிழவனின் உடலைக் குடிசைக்கு வெளியே இழுத்துப் போட்டனர். படுத்திருந்த பாயையும், தலையணையும் எடுத்து உதறிச் சோதனை போட்டனர்.

அவர்களுடைய சோதனை முடிந்ததும் குடிசையைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.

கிழவனின் உடம்பு அநாதையாய், வானத்தைப் பார்த்தபடி வாய் திறந்திருக்க, வானத்துச் சந்திரன் கிழவனின் உடம்பிற்கு ஒளி கொடுத்துக் கொண்டிருந்தது.

---

அந்நியக் கரங்களின் அடிதடிக் கடிக்கடி
அடகுச் சந்தை ஆகிறது — இப்
புண்ணிய பூமியின் கன்னிய வான்கள்
சாயம் வெளுத்துப் போகிறது.

மண்ணின் வண்ணம் மாறிச் சிவந்தே
மக்கள் யுத்தம் வருகிறது — எம்
கண்ணில் தெறிக்கும் கனலின் பொறியே
நம்பிக்கையைத் தருகிறது.

— சூர்யமுகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையக மக்களை இன்றுவரை ஏமாற்றிவரும் தலைமைகளையும், அரசையும் பகிரங்கமாகவும், நேரடியாகவும் எதிர்த்துச் சரியான கருத்துகளைத் தெரிவித்திருப்பதினால் மலையக மக்கள் முன்னணியினருடனான பேட்டியை பிரசுரித்துள்ளோம்.

கலம் 17இல் பிரசுரமான 'புதிய பாதை' என்ற சிறுகதையைப் பற்றிய 3 வாசகர்களின் விமர்சனங்கள் வாசகர் கடிதம் பகுதியில் பிரசுரமாகியுள்ளன. இதில் கே.வசந்தன் என்ற வாசகர் சிறுகதையில் அரசியல் சகதி பூசப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அச் சிறுகதையில் அரசியற் சம்பவமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இந்திய இராணுவத்தின் பாலியற் பலாத்காரச் சம்பவங்களே. இச் சம்பவத்தை சிறுகதை உள்ளடக்கியதால் இலக்கிய நேர்மை காணாமற் போகவில்லை.

பெண்கள் அவர்களது சகோதரர்கள், மாமன்மார்கள் என எல்லோராலும் பாலியல் பலாத்காரங்களுக்கு உள்ளாகிறார்கள் என்ற ப.மல்லிகா என்ற வாசகரின் கருத்தில் இவை ஒரு சாதாரண நிகழ்வு என்றதொனியைக் கொண்டிருப்பதானது இந் நிகழ்வுகள் பற்றிய வாசகரின் தவறான கண்ணோட்டத்தையே காட்டுகிறது. சோப்பு விளம்பரங்களுக்குப் போலவே இப்போது அரசியற் பிரச்சாரத்திற்கும் பெண்கள் பாவிக்கப்படுகிறார்கள் என்ற இவ்வாசகரின் கொச்சைத்தனமான கருத்து தற்போது இலங்கையில் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துவரும் அனைத்து கும்பல்களுக்கும் வக்காலத்து வாங்குவதாகவே இருக்கிறது.

---

<u>பிழை திருத்தம்</u>:

கலம் 17இல் பிரசுரமான 'தொடர்கின்ற பயணத்தில்' என்ற கவிதையில் இரண்டாவது வரியில் 'நேசம்' என்பது 'நேரம்' என்றும், 21வது வரியில் 'எப்போது' என்பது 'எப்போதும்' என்றும், வாசகர் கடிதம் பகுதியில் ஆ.நாகலிங்கம் என்ற வாசகரின் கடிதத்தில் 8ஆவது வரியில் 'பெயர்கள்' என்பது 'பேயர்கள்' என்றும் தவறுதலாக தட்டெழுத்தாக்கப்பட்டுவிட்டது. எமது கவலையீனத்தால் ஏற்பட்ட இத் தவறுகளுக்கு வருந்துகிறோம்.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ப் புத்தகக் கண்காட்சி

காலம்: 20.06.89 செவ்வாய் பி.ப 12.00 மணி

இடம்: CAFE GRENZENLOS
Oranienstr 159
1000 Berlin 61

U-Bahn: Moritzplatz/Kottbusser Tor

Bus : 29

பழந்தமிழ் இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய ஈழ அரசியல் நிலையை ஒட்டி எழுந்த அண்மைக்கால வெளியீடுகள்வரை சுமார் 1,000 தமிழ்ப் புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

சமூகவியல், வரலாறு, அரசியல், இலக்கியம், இலக்கிய விமர்சனங்கள், சிறுவர் இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள், மரபுக் கவிதை, புதுக்கவிதை உட்பட, மேற்கு ஜேர்மனியில் இதுவரை வெளியாகிய, வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சஞ்சிகைகளின் சேகரிப்பு என்பன இக்கண்காட்சியில் அடங்கும்.

இப்புத்தகக் கண்காட்சியின் பின்னர் கலாச்சார உணவுடன் கூடிய, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தகவல்: சுசீந்திரன்,
பேர்லின்.

நன்றி:

சிறுகதைக்கான ஓவியம் – மண்ணைத்தேடும் மனங்கள்

34ஆம் பக்கக் கவிதை – சூரியக் குளியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறந்த புத்தகம்

-சிவம்-

அந்தக் கிராமத்துப்
புழுதியில்
குருதி கசியும் கைகளும், கால்களும்
தலைகளும்.
விபரமறியாத மனிதர்களின்
தண்டிக்கப்பட்ட அங்கங்களாய் ...
கொலைவெறியின் சாட்சியங்களாய் ...

துண்டிக்கப்பட்டதும்
தண்டிக்கப்பட்டதும்
வெறும்
அங்கங்களும் மனிதர்களும் அல்லவே



இன்னோர் இனத்துடனை
உறவும், நட்பும்,
நம்பிக்கையும்தான்.

எதிரி
நம்மை நாலாக்கியதில்
இன்னும் அவிழ்க்கப்படாமல்
எத்தனை முடிச்சுகள்.

பிரித்தாளும் யுக்தியில்
நம்மை வெட்டிப் பிளந்து
ஆழக்கிளறி பாசிசத்தின்
ஆணிவேரை நட்டு வைக்கிறான்.

நாமோ
பிசாசுப் பிணவெறியில்
அவன் தந்த துப்பாக்கியால்
நம்மவனைக் கொன்று
கொலை நடத்துகிறோம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனிடம்
இன்னும் துப்பாக்கிகள் இருப்பதை
மறந்து.
அவையும் நம்மைக் கொண்டு
நம்மைக் கொல்லவே.

இன்னும் தொடரும்
இயக்க மோதல்
இயக்கத்திற்குள் மோதல்.
இவை
எதிரி தரப்பில் இல்லாத
இழப்புகள்.

கட்சி வெறியும்
தலைமைப் பக்தியும்
நியாயப்படுத்தலும்
கொள்கைகளைக் கொன்றுவிட்டதால்
இன்று
இவைகளே 'கொள்கைகள்'




நமது
கௌரவ வேடத்திற்கான
ஆடைகளைக் களைந்து
எதிரிகளைப் புரிந்து கொள்வோம்.
நாம் என்றோ
தற்காலிகமாகத் தோற்றுப்போனதையும்
தெரிந்து கொள்வோம்.

நமக்கு முன்னால்
சிதறிக் கிடக்கும்
அனுபவம் அச்சடித்த
புத்தகங்களை வாசிப்போம்.

முதல் வாசிக்க வேண்டிய
புத்தகத்தின்
பெயர் இதுதான்.

அந்நியன்
இறைத்துவிடும் இருட்டிலிருந்து
நமக்கான
வெளிச்சத்தைப் பிழிய முடியாது.

www.tamilarangam.net



# கனவை மிதித்தவள்

— பார்த்திபன்

வெயில் ஏராளமாகத் தகித்தது. பலரின் உடைகள் நனைந்து கொண்டன. சிலர் அடிக்கடி 'உஸ்' ஸென்றார்கள்.

மதிய போசனத்தின் பின் மறுபடி வேலை ஆரம்பித்திருந்தது.

முதலாளி சாத்திய அறைக்குள் மெத்தை பதித்த நாற்காலியில் அமுந்தி, சம்பிரதாயத்திற்குக் கடதாசிகளில் கிறுக்கிக் கொண்டிருக்க, அறைக்கு வெளியே தொழிலாளப் பெண்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வியத்வையாயிருந்தார்கள்.

மீரா வேலையாக இருந்தாலும் லதாவுடன் நடந்த உரையாடல்களை மறுபடி மறுபடி அசைபோட்டுக் கொண்டிருந்தாள். அந்த உரையாடல் அவளுள் பல கேள்விகளைப் பிறப்பித்திருந்தது.

'அப்ப எங்கட போராட்டம் விடிவுக்காய் இல்லையோ?'

'அல்லாட்டி சரியான விடிவுக்காய் நாங்கள் இன்னும் போராடேலயோ?'

'சரியான விடிவுக்காய் போராட வெளிக்கிட்டுத்தான் இப்பிடி வந்து நிக்குதோ?'

'அல்லாட்டி இப்பிடியாய் இருந்துதான் சரியான பாதையை தேடுமோ?'

எல்லாக் கேள்விகளுக்குமே இப்போது அவளுக்கு லதாதே வைப்பட்டாள். அவளைப் பார்க்க, லதா அலட்டிக் கொள்ளாமல் வேலையாயிருந்தாள்.

தொடர்கதை 42



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போதே எல்லாக் கேள்விகளையும் கேட்டு விடைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் போலிருந்தாலும், சூழ்நிலையை அனுமானித்து மீறு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். 'இதில வேல செய்யிறவை மில ஆர் ஈப்பி, ஆர் புலி, ஆர் ரெலோ, ஆர் வேற இயக்கம் எண்டேதெரியேல. நான் கேக்கிற கேள்வியள் அதுகளைத் தாக்கப் போய் பிறகு இனந்தெரியாத நபருகள் வீட்ட வர....!. எனக்கென்ன நடந்தாலும் பறவாயில்லை. தேவையில்லாம லதாவையும் மாட்டிவிட்டதாய் இருக்கக் கூடாது. 'எனக் கருதி மீறு பேசாமலிருந்தாள். அப்போதுதான் அவளால் அந்த உண்மையை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

முன்னெப்போதும் இல்லாதவகையில் இப்போதெல்லாம் யாரைப் பார்த்தாலும் சந்தேகமாயிருந்தது. இவர் இவராய்த்தான் இருக்கிறாரா அல்லது ஏதாவது இயக்கமாய் இருக்கிறாரா என்பது தெரியாமல் யாருடனும் மனம்விட்டுக் கதைக்க முடியவில்லை. நெருங்கிப் பழகவும் முடியவில்லை. கூண்டுக்குள் இல்லாவிட்டாலும் கூண்டுக்குள் இருப்பது போன்ற உணர்வு அநேகமானோரை வியாபித்திருந்தது.

'பள்ளிக்கூடத்தில ஊர்வலம் வைச்சா பள்ளிக்கூடப் பெடியளை சுடுறாங்கள். கம்பசில ஊர்வலம் வைச்சா கம்பசுக்க போய் சுடுறாங்கள். பேப்பரில சரியான நிலையை எழுதினு எழுதினவரைச் சுடுறாங்கள். தெரிஞ்ச விசயத்தை மற்றவரோட கதைச்சா கதைச்சவரையும், கேட்டவரையும் சுடுகிறாங்கள். சிரிச்சாக்கூட நக்கலாக்குமெண்டு சுட்டுத் தள்ளிப் போடுவங்கள்.'

'ஆக ஆரும் ஆரையும் சுடலாம். சுடக்கூடியவனே பாக்கியவான். அவனுக்காக இந்த நாட்டின் எல்லாப் பகுதிகளும் திறந்திருக்கும். ஆயுதம் வைச்சிருக்கிறவைக்குத்தான் எதையும் செய்யச் சுதந்திரம். அவையள்தான் அதிகாரத்தையும் வைச்சிருக்கினம். அவையளே இதைத் தாராளமாய் வைச்சுக்கொண்டு பிறகேன் இதுக்காண்டிப் போராடுறதாய் அடிக்கடி சொல்லிக் கொள்ளுயினம்?'

'அப்பிடி அவை சொல்லுறதிலயும் பிழையில்லை. மக்களுக்காண்டித்தான் தாங்கள் சண்டை பிடிக்கிறம் என்டுதானே அப்பப்ப சொல்லுகினம்.'

'பிறகேன் அப்பாவிச்சனங்களை நாய் சுடுற மாதிரிச் சுடுவான்?'

'சிலவேளை மக்கள் எண்டா ஆர் என்டு கண்டுபிடிக்கிறது கஷ்டமாயிருக்கோ?'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'அல்லாட்டி சில புருசன்மாருக்கு படுக்கேக்க மட்டும் உணர்ச்சியுள்ள மனுசி தேவைப்படுற மாதிரியும், மிச்ச நேரங்களில அவள்மிசினும், சட்டை தோய்க்கிற கல்லாய், கால் துடைக்கிற சாக்காய் இருந்தாக் காணும் என்ட மாதிரியும் போலதான் இவைக்கு மக்கள் என்டது தங்கட அறிக்கையளுக்கும், பத்திரிகையளுக்கும், துண்டுப் பிரசுரத்துக்கும் பாவிச்சாய் காணும். மற்றப்படி பூந்து விளையாடுவம் என்டு நினைக்கினமோ?'

"என்ன வெளியில எல்லாம் கொட்டுறீர்?" பக்கத்திலிருந்தவள் சொல்ல, மீனு திடுக்கிட்டுப் பார்த்தாள். பழச் சக்கைகள் தரையில் சிந்தியிருந்தன.

"ராத்திரி நித்திரையில்லைப் போல" என்று அவள் தொடர்ந்து சொல்ல, மற்றவர்கள் பக்கென்று சிரிக்க, மீனு வெட்கமாய் லதாவைப் பார்த்தாள்.

லதா இவளைக் கவனியாது தனது வேலையில் மூழ்கியிருந்தாள். மீனுவுக்குச் சாடையாகக் கோபமும் வந்தது. 'தனக்கு கொஞ்சம் விசயங்கள் தெரியுமெண்டாப் போல மற்றவையைக் கவனியாம கெப்பரும் நிக்க வேணுமே?' என்று நினைத்து உடனேயே தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். 'விசயம் தெரிஞ்சவை உப்பிடித்தான் அமசடக்காய் இருப்பினம்'

நேரம் உற்பத்தியைப் பெருக்கி, உழைப்பை உறிஞ்சிக் கொண்டிருக்க, வெளியே சூரியனின் நகர்வால் பகல் காட்சிகளில் மாற்றமேற்பட்டுக் கொண்டிருந்தன.

கெலிக்கொப்ரர் ஒன்று மேலால் போய் மறைந்தது. கொஞ்ச நேரத்தின் பின் எங்கோ தொலைவில் வெடிச்சத்தம் கேட்டது. வாகனங்கள் தாறுமாறாய் ஓடின. சில மணித்தியாலங்களின் பின் அடுத்த அலுவல்களைக் கவனிக்க எல்லாம் வழமையாகின.

வேலை நேரம் ஒரு வழியாக முடிந்தது. எல்லோரும்பதிவை முடித்துக் கொண்டு, இழந்த உற்சாகங்களைச் சேகரித்தபடி பாதைக்கு வந்தார்கள்.

சாப்பாட்டுப் பெட்டியைக் கைப்பைக்குள் வைத்துவிட்டுத்திரும்பிய மீனுவின் எதிரில் லதா வந்து நின்றாள்.

"வீட்ட உடன போக வேணுமோ அல்லாட்டி கொஞ்சம் நேரமிருக்குமோ?" என்ற லதாவின் கேள்விக்கு ஏனென்ற ஆச்சரியத்துடன் "இல்லை, ஏதேன் அலுவலே?" என்று மீனு பதிலாகக் கேட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கொஞ்ச நேரம் நடந்து நடந்து கதைப்பம்.நீர் கனக்க கேள்வியள் வைச்சிருக்கிறீரெண்டு தெரியுது"லதா சொல்லிவிட்டு முன்னே நடக்க,அவளின் கண்டுபிடிக்கும் திறமையை வியந்தபடி மீரு பின் தொடர்ந்தாள்.

எதிரெதிர் பஸ் தரிப்புகளில் மிச்சமான தொழில் சிநேகிதிகள் பஸ்ஸிற்காகக் காத்திருக்க,ஏனையோர் மாயமாகியிருந்தார்கள்.

குண்டும்,குழியுமான தார் ரோட்டை விட்டு விலகி அருகாய் ஓடிய மண் விளிம்பில் இருவரும் நடந்தார்கள்.

"உம்மட தம்பி யேமனியில எண்டு சொன்னீர்.செலவுக்குக் காசுகள் அனுப்பிறவரோ?"லதா நடந்தபடியே கேட்டாள்.

பின்னால் வந்து கொண்டிருந்த மீரு சற்று வேகமாகி அவளுக்குச் சமாந்தரமாய் வந்தபின்"என்னத்தை அனுப்பிறது?அங்கயும் வேலை இல்லையாம்.காசனுப்பாட்டிலும் கடிதம் போட்டாக் காணுமே.ஏதோ இப்பக் கொஞ்சக் காலமாய்த்தான் தொடர்ந்து கடிதங்கள் போட்டுக் கொண்டிருக்கிறான்.இப்ப இப்பதான் குடும்ப கஷ்டங்கள்,நாட்டுநிலமையள் விளங்குது போல"என்றாள்.

"அப்ப இவ்வளவு நாளும் யேமனி அவருக்கு இஞ்சத்தையில் நிலமையள் தெரியவிடாம மறைச்சிருக்கு"

"அதேதான்.அததான் இவ்வளவு நாளும் தான் பிழைசெய்து போட்டன்.இப்ப திருந்தியிட்டன் எண்டு ஒவ்வொரு கடிதத்திலயும் மன்னிப்புக் கேக்கிறன்"

"பறவாயில்லை.உம்மட தம்பி உண்மையிலயே ஒரு நல்ல மனுசன்தான்.பிழையள் செய்யிறது மனுசன்ரை இயல்பு.அதோட சிலபேருக்கு தாங்கள் செய்யிறது பிழையெண்டே தெரியேல.தாங்கள் செய்யிறது அல்லாட்டி செய்தது பிழைதான் எண்டு தெரிய வரேக்க அதுகளை ஒப்புக்கொண்டு,செய்த பிழையளுக்கு வருந்தி சரியான பாதையைத்தேடுறதுதான் ஒரு மனுசனுக்குரிய சரியான,நல்ல குணம்சம்.இந்தக் குணம் கனபேரிட்ட இல்லை.அதாலதான் கனக்க மோதலும்,கொலையளும் நடக்குது."

மீரு மௌனமாகக் கேட்டுக்கொண்டு நடக்க,லதா நிதானமாகத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

"இப்ப இஞ்ச நடக்கிற அநியாயமான படுகொலையளில கனக்க தங்கட பிழையளை பிழையெண்டு ஏற்காம அதுகளைச் சரியெண்

(தொடர்ச்சி 44ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஜூன் 1989 கலம் : 18

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் – 20 டி.எம்.
1 வருடம் – 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் – 25 டி.எம்.
1 வருடம் – 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுநியாயமாக்கத்தான் நடக்குது.பிழையெண்டு மற்றவை சுட்டிக்காட்டுற தால வாற ஆத்திரத்தைத் தாங்கேலாமயும் கொலேயள் நடக்குது.கொ ஞ்சக் காலத்துக்கு முந்தி இயக்கங்களெல்லாம் மக்களும் பார்வையாள ராயில்லாம போராட்டத்தில பங்காளராய் மாறவேண்டுமெண்டு அடிக்கடி ஞாபகப்படுத்தினது உமக்கு ஞாபகமிருக்கே?"லதா கேட்க இருக்கிறதெ ன்பதாக மீனு தலேயசைத்தாள்.

"அப்பிடியிருந்தும் இண்டைக்கு மட்டுமேன் சனம் அப்பிடிமாறேல த் தெரியுமே?

சனத்தைச் சரியான முறையில அரசியல்மயப்படுத்தாதோட பெரிய காரணி பயம்.இண்டைக்கு எந்த ஒரு இயக்கத்தைப் பற்றிக்கூடச் சனம் வாயைத் திறந்து கதைக்கேலாம இருக்குதெண்டா பங்காளியாளெ ண்டு மாறிறது?

அடுத்தவை என்ன செய்ய வேணும்?எப்பிடி நடக்க வேணும் எண்ட எல்லா முடிவுகளேயும் எடுக்கிறது தாங்கள்தான் எண்டு ஆயுதங்கள் வைச்சிருக்கிற எல்லாரும் சண்டித்தனமா நடக்கேக்க இதுதான் போரா ட்டமாக்கும் எண்டுதானே சனம் நினேக்கும்.என்பத்தி மூண்டுக் கலவரத்து க்குப் பிறகு சனங்கள் ஏன் தொகையாய் போய் இயக்கங்களே வீங்கப் பண்ணினவையெண்டு தெரியுமே"லதா கேட்க,மீனுவின் தலேயசைப்பு இல் லேயென்று கருத்துத் தெரிவித்தது.

"அப்ப அநேகமான சனம் பிரச்சினேயளால நேரடியாப் பாதிக்கப்பட்டிது.அதால ஆமிக்காறங்களே கொல்ல வேணுமெண்டவெறி வந்திருந்திது.அதோட ஆயுதப் போராட்டத்தைப் பற்றின நேரடி அநு பவம் எதுகுமில்லே.

அப்ப அரசாங்கத்தாலயும்,ஆமிக்காறங்களாலயும் மற்றகூலி ப்படையாலயும் இருந்த பாதிப்புகளே இப்ப இயக்ககாறர் தாங்கள் பொறுப்பெடுத்து பொறுப்பாய் செய்து வருகினம்.இதால முந்தி சனங்க ளிலயிருந்த அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு,தீவிரமான எதிர்ப்பு, இப்ப தங்களே தங்கட ஆக்களிட்ட இருந்து பாதுகாக்கிறதிலயும்,தங்கட ஆக்களில தங்களுக்கெதிராய் இருக்கிறவையை தீர்த்துக் கட்டுறதிலயுமாய் திசை மாறிப் போச்சு.அதோட கனபேருக்கு இவ்வளவு நாளும் நடந்த ஆயுதப் போராட்டம் புத்தங்களால தரமுடியாத பெரிய படிப்பினேயை தந்திருக்கு.இந்த இரண்டாவது விசயம் தான் முக்கியமான,நன்மையான, தேவையான ஒண்டு.சனங்களின்ரை எதிர்ப்புணவு பிரதான எதிரிக்கெதிராய் இல்லாமல் திசை மாத்தப்படுறதும்,மழுங்கடிக்கப்படுறதும்தான் பாதக மான விசயங்கள்"லதா சொல்ல மீனு குழம்பிப்போனுள்.

(இன்னும் வரும்)